
# உலகத்தமிழ்

திங்கள் மின்னிதழ்

பிப்ரவரி 2023



நாட்டுப்புறக்கலை – ஒயிலாட்டம்



# அட்டைப்பட விளக்கம்...

## ஒயிலாட்டம்...

தமிழ்நாட்டின் நாட்டுப்புறக் கலைகளில் முக்கியக் கலையாக ஒயிலாட்டம் உள்ளது. ஆண்கள் குழுவாக இணைந்து ஆடும் ஆட்டம் ஒயிலாட்டமாகும். இந்த ஆட்டம் கோயில் திருவிழாக்களிலும் பொது நிகழ்ச்சிகளிலும் நிகழ்த்தப்படுகின்றது.

ஊர்க்காவல் தெய்வங்களையும் முன்னோர்களையும் வழிபடும் மாசிக்களரி விழாவிலும் அம்மன் எடுப்பு, கொடை விழாக்களிலும் கோயில் குடமுழுக்கு நிகழ்ச்சியிலும் விநாயகர் கோயில் விழாக்களிலும் இந்த ஆட்டம் நடத்தப்பெறுகின்றது.

தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களின் திருவிழாக்களில் ஒயிலாட்டம் ஆடப்படுகின்றது. ஒரே நிறத்தினாலான துணியை முண்டாசு போல கட்டிக் கொண்டு காலில் சலங்கை அணிந்து கொண்டு ஒரு சிறு துணியை இசைக்கேற்ப வீசி ஆடக்கூடிய ஒரு குழுவின் ஆட்டம் தான் ஒயிலாட்டம்.





மலர் – 3 | இதழ் – 6 | பிப்ரவரி 2023

உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையின்

# உலகத்தமிழ்

## திங்கள் மின்னிதழ்

**ஆசிரியர்**

முனைவர் **ப.அன்புச்செழியன்**
இயக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

**துணை ஆசிரியர்கள்**

முனைவர் **சு.சோமசுந்தரி**
ஆய்வறிஞர்

திருமதி **ஜ.ஜான்சிராணி**
ஆய்வு வளமையர்

**செய்தி ஆசிரியர்**

முனைவர் **சி.புவியரசு**
மின்னிதழ் உருவாக்குநர்

**இதழ் வடிவமைப்பு**

திருமதி **பெ.செல்வராணி**
கணினி செயல்முறையாளர்

தொடர்புக்கு

0452-2530766/2530799

utsmdu2@gmail.com

Uts Mdu

@TamilUlaga

உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

**அட்டைப்பட ஓவியம்**

ஓவியர் **அ.கண்ணன்,** மதுரை

**முகவரி**

**இயக்குநர்,**
**உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை**
மருத்துவர் தங்கராசு சாலை,
சட்டக்கல்லூரி அருகில்,
மதுரை – 625 020.

அன்புள்ள நண்பர்களே!

வணக்கம்,

பிறருக்குத் தருவதால் குறையாத செல்வம் கல்விச் செல்வம் மட்டுமே. மற்ற அனைத்துச் செல்வங்களிலும் உயர்வானது கல்விச்செல்வம் ஆகும். கல்வியின் சிறப்பை மாணவப்பருவத்தில் மட்டுமில்லாமல் எக்காலத்திலும் நாம் உணரமுடியும். பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின்பும் பலர் கல்வியின் மேல் கொண்ட காதலால் படிப்பைத் தொடருகின்ற நிலையைக் காணலாம். கல்விப்பேறு மற்ற எல்லாப் பேறுகளிலும் முதன்மையானது. கல்வியின் சிறப்பை உணர்ந்தே நாலடியார்,

**“களர்நிலத்துப் பிறந்த உப்பினைச் சான்றோர்**
**விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்**
**கடைநிலத்தோ ராயினும் கற்றறிந்தோரைத்**
**தலைநிலத்து வைக்கப்படும்”**

என்று ஒருவன் கீழ்க்குலத்தில் பிறந்தாலும் ஒருவன் கல்வி கற்றால் மேலான குடியினரை விட உயர்ந்த இடத்தில் வைத்து அவனை மதிக்க வேண்டும் என்று கூறுகிறது. இவ்விடத்தில் கல்வியின் மேன்மையை மட்டும் கருத்தில் கொள்ள வேண்டும். கல்வியின் சிறப்பை இன்றைய மாணவர்கள் உணர்ந்து செயல்பட வேண்டும். கற்பதற்கு ஏற்ற பருவத்தைத் தக்கமுறையில் பயன்படுத்தி வாழ்வில் வெற்றி காணவேண்டும். அனைவரும் கல்வியில் சிறந்து விளங்க எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி!

முனைவர் ப.அன்புச்செழியன்
ஆசிரியர்

# உள்ளே


| | | |
|---|---|---|
| 1. குறுந்தொகையும் சமூகவியலும் (பகுதி – 3) | – | 5 |
| 2. கவித்துளிகள் | – | 8 |
| 3. மணிமேகலை உ.வே.சா.பதிப்பு (பகுதி – 3) | – | 9 |
| 4. துளிர்க்கும் சருகுகள்... | – | 11 |
| 5. பத்துப்பாட்டு பாடல்களின் தொன்மையும் இலக்கிய நயமும் (தொடர்ச்சி) | – | 12 |
| 6. திருவிளையாடல் படலம் – 2 | – | 15 |
| 7. வள்ளுவமும் இஸ்லாமும் போதிக்கும் நாவடக்கம் | – | 16 |
| 8. மொழிபெயர்ப்புக் கவிதை | – | 19 |
| 9. சங்கச்சுவடுகள் | – | 20 |
| 10. முழு நிலவு | – | 23 |
| 11. விழையாமை என்னும் பேராண்மை | – | 24 |
| 12. பெருமையும் சிறுமையும்..! | – | 27 |
| 13. பிச்சை சோறு (சிறுகதை) | – | 28 |
| 14. திங்களும்... சிறப்பும்... | – | 30 |
| 15. தடம்... | – | 35 |
| 16. இலக்கியப் பேழை | – | 36 |
| 17. அறிவிப்பு | – | 38 |

# குறுந்தொகையும் சமூகவியலும்

## (பாலைத்திணைப் பாடல்களை முன்வைத்து)

பகுதி–3

முனைவர் **ப.சு.மூவேந்தன்**
அண்ணாமலை நகர்

### ஒழுக்கமே கற்புநிலை

இல்லற ஒழுக்கம் ‘கற்பு’ என்னும் சொல்லால் குறிக்கப்பட்டது. திண்ணிய ஒருமுக ஆற்றல் இது குறித்து வரினும், இதற்குக் கற்பித்தல், கற்பித்தவாறு நடத்தல் எனப் பொருள் கொள்ளலாம்.

மரபு வழியாக, தம் பெற்றோர் மூலமாகக் கற்றுக் கொள்ளுதலையே இது குறிக்கும். அது தந்தை, தாயர் கற்பியாமல், பார்த்தும் உணர்ந்தும் குருதி வழிப் பண்பாட்டின் அடிப்படையிலும் பெறும் கல்வி என்றும் கூறுவார் கு.வெ.பாலசுப்பிரமணியன். ‘அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள்?’ என வியத்தல் இதன் அடிப்படையிலே ஆகும்.

தாய் திகைப்பவும் புகழவும் அமைந்த குடும்ப ஒழுகலாறே கற்பு எனப்பட்டது. இதனால் ‘கற்பு’ என்பது ‘முன்னோர் சொல்நெறி பிழையாது நிற்றல்’ என்பதைக் காட்டும்.

செம்பொன்னால் செய்த பாண்டத்திலே பொரியோடு கலந்த பாலைக் கொடுக்கும் போதெல்லாம் சரியாக அருந்தவும் செய்யாதாள்; அது அதிகம் என்று சொல்லி உண்ண மறுப்பவள். அத்தகைய வளம் பொருந்திய வாழ்க்கையினை மேற்கொண்டிருந்த தலைவி இப்போது சொல்லொணாத் துயரங்களைத் தரும் உடன்போக்குச் சென்றுவிட்டாள். நிழலே இல்லாத வழி, நீரும் அற்றுப்போன வறண்ட நெறி. இந்த வழியிலே வீரக்கழலை அணிந்த காவலன் காவலாக வர விரைந்துசென்றாள். நீர் வறண்ட சுனையிலே காய்ந்து சூடேறிப்போன கலங்கல் சேற்று நீரை நல்லென்னும் ஓசைப்படக் குடிப்பதற்கு எவ்வாறுதான் துணிந்தாளோ? வீட்டிலே பாலைக்குடிப்பதற்கு மறுப்பவள் பாலைநிலத்துச் சேற்றுத் தண்ணீரை எப்படித்தான் குடிப்பாளோ? என வியத்தலும் அது, அவள் கொண்ட கற்புநிலையின் தலையாய பண்பென வியந்து, விடையிறுத்தலுமாகிய நிலைப்பாட்டினை,

**“நிழல்ஆன்று அவிந்த நீர்இல் ஆர்இடைக்**
**கழலோன் காப்பக் கடுகுபு போகி**

**அறுசுவை மருங்கின் மறுகுபு வெந்த**
**வெவ்வெங் கலுழி தவ்வெனக் குடிக்கிய**
**யாங்கு வல்லுநள்கொல் தானே—ஏந்திய**
**செம்பொன் புனைகலத்து அம்பொரிக் கலந்த**
**பாலும் பல என உண்ணாள்;**
**கோல்அமை குறும் தொடித்தளிர் அன்னோளே”**

**– (குறு. 356)**

என்னும் பாடல் வெளிப்படுத்தக் காணலாம். செல்வச் செழிப்பும் வளமையும் மிக்க தலைவி, பாலைநிலத்தில் கிடக்கும் சேற்றுத் தண்ணீரைக் குடிக்கவும் ஒருப்பட்டாள் என்பதில் அவள் தன் காதலுணர்வின் கொண்டுள்ள உள்ளத்திண்மையும் அவ்வாறு நிற்பதற்கு அவளது மரபுவழி வந்த கற்பு நிலையுமே சான்றாகத் திகழ்ந்ததை இப்பாடல் காட்டுகின்றது. உடன் போக்கில் சென்று தலைவியை நினைந்து செவிலித்தாய் பாடும் பாடலாக இது அமைந்துள்ளது.

சங்கச் சமூகத்தில் உடன்போக்கு, தலைவன்மீது தலைவி கொண்டிருந்த கற்பு நிலைக்கு ஓர் உயரிய சான்றாக இருந்துள்ளது. தான் கொண்ட காதலில் கற்பின் நெறி நின்று உள்ளத்திண்மையுடன் எதிர்வரும் துன்பங்கள் யாவற்றையும் எளிதெனப் பொறுத்து, துன்பத்தைப் பொருட்டாகக் கருதாத நிலையினைத் தெளிவுறுத்துவனவாக உள்ளன.

### தலைவியின் உள்ளத்திண்மை

சங்கச் சமூக வாழ்வியலில் மகளிர் கொண்டிருந்த உள்ளத்திண்மை அவர்தம் ஆற்றலுக்குச் சான்றாக அமைந்திருக்கின்றது. உயிரணைய தலைவன்மீது தலைவி கொண்டிருந்த நட்பினை மிக உயர்வானதாகக் கருதுகிறாள். தலைவன் பொய் வலாளன்; மெய்யானவன் என்ற நம்பிக்கை தலைவியின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்துள்ளது. ஈருயிர் ஒருடல் என்ற நிலையில் வாழ்ந்த தலைமக்கள் பிரிவென வரும்போது படும் உள்ளத்துயரின் வெளிப்பாடு,

**“விடர்முகை அடுக்கத்து விறல்கெழு சூலிக்குக்**
**கடனும் பூணாம்; கைந்நூல் யாவாம்:**
**புள்ளும் ஓராம்: விரிச்சியும் நில்லாம்;**
**உள்ளலும் உள்ளாம் அன்றே—தோழி ?**
**உயிர்க்கு உயிர் அன்னர் ஆகலின், தம்இன்**
**இமைப்புவரை அமையா நம்வயின்**
**மறந்து ஆண்டு அமைதல் வல்லியோர் மாட்டே”**


**– (குறு. 218)**

என்னும் பாடலில் எடுத்துரைக்கப்படுகின்றது. தலைவி, தலைவன் மீது கொண்ட அன்பு அளப்பரியது. தலைவி, தலைவனுக்கு உயிர் போன்றவள். இமைப்பொழுதும் நம்மால் பிரிந்திருத்தல் இயலாது. இவ்வியல்பையுடைய

நம்மை மறந்து அவர் ஆங்குத் தங்குவதிலேயே கருத்தினராக இருக்கிறார். ஆதலால் தலைவன் மீண்டு வருதல் வேண்டி கொற்றவைக்குப் பலியிடுதல், அதற்கு நோன்புகள் மேற்கொள்ளல், அது பற்றிப் புள்ளின் நிமித்தம் பார்த்தல், நற்சொல் கேட்டல் ஆகியன யாவும் செய்யோம். தலைவன் தன்னிடத்துத் திரும்ப வரும்வரை யாம் கொற்றவைக்குப் பலிக்கடன் நேர்ந்து கொள்ள மாட்டோம். அதற்கு நோன்புகள் எடுக்க மாட்டோம். கையில் காப்பாக நூல் யாத்தலையும் செய்யோம். அது பற்றிப் புள்ளின் நிமித்தங்களும் பார்க்க மாட்டோம். நற்சொல் கேட்டு நில்லோம்.

தலைவன் தன்னை மறவாமை ஒன்றே தான் உயிர் தரித்திருப்பதற்கு ஏதுவாக உள்ளது. அவரும் மறப்பராயின் தான் உயிர்வாழ்தல் பொருளற்றது என்ற தலைவியின் நிலை இப்பாடலில் எடுத்துரைக்கப்படுகின்றது.

நம்மை மறவாதவர், நம்மை நினைந்து வருவர் என்ற நசையினால், தன்னைப் பிரிந்த பின்னரும் ஆற்றி இருப்பவளானாள். அவ்விருப்பம்கெட அவர் பிரிந்த இடத்திலேயே தங்குவர் ஆனதால், நாம் அவர் பொருட்டுச் செய்யும் செயல்கள் வீணான முயற்சியாகவே இகழப்படும் என்ற தலைவியின் மனநிலையும் தலைவனின் இழிநிலையும் சமூக நோக்கில் இப்பாடலில் எடுத்துரைக்கப்படுகின்றன.



“நம் அன்பின் மிகுதியை அறிந்து திரும்பிவர வேண்டுவது தலைவர் கடமை. அதற்காக நாம் ஒன்றும் செய்ய வேண்டுவதில்லை. தலைவனிடம் அகலாத அன்புடையவர்கள் வேறு தெய்வங்களை வேண்டிக் கொள்ள மாட்டார்கள். தலைவனுடைய அன்பு ஒன்றையே எதிர்பார்த்து நிற்பார்கள். இதுவே உண்மையான காதலும் கற்பும் உள்ள பெண்களின் இயல்பாகும். இக்கொள்கையை விளக்கி நிற்கிறது இச்செய்யுள்” என்று இப்பாடலுக்குப் பொருள் தருவார் சாமி. சிதம்பரனார்.

சங்கச் சமூகத்தில் பரவலாக்கம் பெற்றிருந்த வழிபாடு, சடங்கு, நோன்பிருத்தல், விரிச்சி கேட்டல், நிமித்தம் பார்த்தல் முதலான செய்திகளை இப்பாடல் எடுத்துரைக்கக் காணலாம்.

■ முற்றும்...

# கவித்துளிகள்



—முனைவர் மு.செந்தில்குமார்



தை அமாவாசையில்
காகம் தேடி மகன்...
வாசலில் அப்பா...



மோது... வெல்ல வேண்டியது
ஐந்தறிவையல்ல.
ஆறறிவுப் போலிகளை



பெய்யட்டும்
மழை.
நான்...
அம்மாவின்
முந்தானைக்குள்




திறந்துவிடலாம்...
எல்லாக் கதவுகளையும்,
கரங்கள்... உனக்குள்ளே...





நிதானமாய் கடக்கிறது...
மணித்துளிகள்
நிலையாய்... வடுக்கள்

# மணிமேகலை உ.வே.சா.பதிப்பு

பகுதி–3


முனைவர் **கதி.முருகேசன் (கதிர்முருகு)**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
கணேசர் கலை அறிவியல் கல்லூரி, மேலைச்சிவபுரி,




நகரங்கள் பண்டைய நாகரிகம், தொழில், பொழுதுகளின் தன்மை அவற்றின் செயல்திறன் ஆகியவற்றில் நுட்பமான அறிவு நலம் உடையவராய்ச் சாத்தனார் விளங்கி இருக்கிறார். சாத்தனாரின் இயற்கை ஈடுபாட்டை விளக்க உ. வே. சா அவர்கள் உவவனம் குறித்து அமைந்த வருணனையையும் அகநானூற்றில் சாத்தனார் படைத்த வானம் வாய்ப்ப என்னும் (134) பாடலையும் எடுத்துக்கொண்டு ஒப்புமைகள் பல இடம்பெற்றிருப்பதை எடுத்துக்காட்டுகிறார்.

மணிமேகலை நூல் முழுவதும் சாத்தனாரின் அறிவு நுட்பம் வெளிப்படுமாற்றை உ.வே.சா. பல சான்றுகளின் வழி எடுத்துக் காட்டுகிறார். அதற்கு, பளிக்கறை மண்டபம், கூற்றுகள், பத்தினியின் உயர்வு, சமயச் சாடல், தீவினை, கூற்றுமுறை முதலானவற்றைச் சான்றாகக் காட்டலாம். ‘மாதவிக்குச் சுதமதி உவவனத்திலுள்ள பளிக்கறை மண்டபத்தைப் பற்றியுரைக்கும் பொழுது ‘விளிப்பறை போகாது மெய்ப்புறத் தீடூஉம், பளிக்கறை மண்டப முண்டு’[14] (3: 63 – 64) என்னும் சாத்தனாரின் அறக் கோட்பாட்டை, ‘உயிர்களின் பசிப்பிணியை நீக்கியும் அவற்றிற்கு உடை இருக்கை முதலியவற்றை வழங்கியும் செய்யப்படும் அருள் திறத்தினது சிறப்பைப் பல வகையில் எடுத்துக்காட்டுகின்றார்’[15] என்றும் “மாதவி கண்ணகியைப் பற்றிக் கூறும் பகுதியில் ஆதிரை மருதி என்பவர்களுடைய வரலாறுகளிலும் சித்திராபதியின் கூற்றிலும் பத்தினிப் பெண்டிர் இயல்பை விளக்க வைத்திருக்கிறார்”[16] என்று பத்தினிப் பெண்டிர் சிறப்புகளையும் “எடுத்துக்கொண்ட நூற்கேற்ற கொள்கைகளைச் சிறப்பித்தல் ஆசிரியரது கடப்பாடாதலின் பௌத்த சமயத்தைப் பாராட்டிக் கூறும் இந்நூலில் சுதமதியின் வரலாற்றால் சமணரையும் ஆபுத்திரனது வரலாற்றால் வேள்வியையும் குறைகூறுதல் அறிதற்குரியது”[17] என்னும் பகுதியால் பௌத்த சமயத்தின் உயர்வையும் “மாதவர்களுக்கு அபசாரம் செய்யின் அத்தீங்கு பெருந்துன்பத்தை விளைவிக்குமென்பதும் அவர்களுக்கு ஒரு சிறிது நன்மை புரியினும் அது பின்பு பன்மடங்கு நற்பயனை உண்டாக்கும்”[18] என்னும் சிந்தனையால் தவத்தார்களின் உயர்வையும் எடுத்துக் கூறியுள்ளார்.

### பிற செய்திகள்

நூல் முழுமையும் எடுத்தாளப்பட்ட நூல்களின் தொகுப்பைப் பக்கம் x முதல் xii வரை தொகுத்துக் கூறியிருக்கிறார். பக்கம் ixஇல் அரும்பதங்களுக்கான விளக்கம் கொடுக்கப் பட்டுள்ளது. Xxxi இல் தொடங்கி xxxii வரை நூலில் பயின்று வரும் பெயர்கள் தொகுக்கப்பட்டுள்ளன. “முப்பத்தைந்து அரசர்

பெயர்கள், ஐந்து ஆறுகளின் பெயர்கள், இரண்டு உலகங்களின் பெயர்கள், அட்சய பாத்திரம், பத்தொன்பது ஊர்களின் பெயர்கள், மூன்று குலங்களின் பெயர்கள், பத்துக் கோயில்களின் பெயர்கள், தருமசாலை, ஆறு தீவுகளின் பெயர்கள், இருபத்து மூன்று தெய்வங்களின் பெயர்கள், இரண்டு நகரத் தெய்வங்களின் பெயர்கள், பத்து நாடுகளின் பெயர்கள், ஐந்து விதமான நூல்களின் பெயர்கள், யானைத்தீ நோய், திட்டிவிடம் என்னும் பாம்பு, புத்த தலங்களின் பெயர்கள், இரு புலவர்களின் பெயர்கள், இரண்டு பொய்கைகளின் பெயர்கள், ஒன்பது மலைகளின் பெயர்கள், இருபது முனிவர்களின் பெயர்கள் மூன்று வனங்களின் பெயர்கள், வாதங்கள் பதினொன்றின் பெயர்கள் இரண்டு விழாக்களின் பெயர்கள் இடம்பெறுகின்றன''[19].

முப்பது காதைகளின் கதைச்சுருக்கமும் இடையிடையே பாடலடிகளும் கொடுக்கப்பட்டு உள்ளன. கதைச்சுருக்கத்தைத் தொடர்ந்து பதிகம் அமைந்துள்ளது. பதிகத்தை அடுத்து நூல் தொடங்குகிறது. பாடல் அடிகளின் எண்கள் குறிப்பிடப்பட்டு அரும்பதங்களுக்கான விளக்கம், நுட்பமான இடங்களுக்கு விரிவான விளக்கம் முதலியன இடம்பெறுகின்றன. பொருத்தமான இடங்களில் ஒப்புமை நோக்கில் பிற இலக்கியங்களில் இருந்து மேற்கோள்களை எடுத்தாள்வது உ. வே. சா. வின் ஆழங்கால்பட்ட நூலறிவுக்குச் சான்றாய் அமைகிறது.

## முடிவாக

உ.வே.சா. வின் மணிமேகலைப் பதிப்பு நூலில் கண்ட கருத்தாக்கங்களின் வழி அரிதான பதிப்பு என்பது பெறப்படும். தமிழ் மேடைக்கும் வயிறு வளர்ப்பதற்கும் உரியது அல்ல. அது தமிழனின் உயிர் என்னும் உயரிய கருத்தை மணிமேகலைப் பதிப்பு தன்னுள் கொண்டிருக்கிறது. பதிப்புக்கான மூலப் பிரதிகளின் தேடல், சரியான பாடத்தை முடிவு செய்தல் ஆகியவற்றுக்கும் பிழைகளற்ற பதிப்புக்கும் உ.வே.சா. எடுத்துக்கொண்ட முயற்சியும் காலமும் நினைத்துப் பார்க்க இயலாத வியப்பை ஏற்படுத்துகின்றன. உ.வே.சா.வின் தமிழ்ப்பணி மண்ணுள்ள வரையும் புகழ்பூத்து விளங்கும் என்பதில் ஐயமில்லை.


## அடிக்குறிப்புகள்

1. புறம். 214: 4
2. ம. வே. பசுபதி (ப. ஆ), மணிமேகலை, பதிப்புரை.
3. உ. வே. சாமிநாதையர், மணிமேகலை, பதிப்புரை, ப. Xxiii.
4. மேலது.
5. மேலது. பக். Xviii xix.
6. மேலது. ப. Xx.
7. மேலது. ப. Xvi.
8. மேலது. ப. Xxiv.
9. மேலது. ப. Xxv.
10. மேலது. பக். Xxv xxvi.
11. மேலது. ப. Xxvi.
12. மேலது. பக். Xxvi vii.
13. மேலது. ப. Xxvii.
14. மேலது. ப. Xxviii.
15. மேலது. ப. Xxix.
16. மேலது. ப. Xxix.
17. மேலது. ப. Xxix.
18. மேலது. ப. Xxix.
19. மேலது. பக். Xxi xxii.

## கருவி நூல்


1. சாமிநாதையர். உ.வே.(பதி), 2008, மணிமேகலை, சென்னை, உ.வே.சா. நூல் நிலையம்.


முற்றும்...


துளிர்க்கும் சருகுகள்...
மௌனம்
என்பது
மனிதர்கள்
பெறவேண்டிய அறிவு;
அறிஞர் குணங்களில்
ஒன்று
– பாய்லோ
அறிவு
பெற விரும்பினால்,
நாவை அடக்கும்
அறிவைப் பெறுவாய்
– லவேட்டர்
நாவை
அடக்குதல்
நற்குணங்களில்
முதன்மையானது
– கதே
மௌனம்
கோபத்தை
அடக்குவதற்குச்
சிறந்ததொரு சாதனம்
– காந்தியடிகள்
காலம் அறிந்து
மௌனமாய்
இருத்தல்
கடினமான பாடமே
– செஸ்டர்பீல்டு
மௌனம்...

மனோன்மணீயம் சுந்தரனாரின் பார்வையில்

# பத்துப்பாட்டு பாடல்களின் தொன்மையும், இலக்கிய நயமும்



முனைவர் **சு.மோதிலால் நேரு***
திருவனந்தபுரம்

## திராவிடர்களின் கடவுள் முருகன்

பொதுவாக புராணங்களில் முருகக் கடவுளின் பிறப்பு பற்றிக் கூறப்பட்டுள்ளதற்கு மாறாக சில கருத்துகளை இந்த வருணனையாளர் கூறுகிறார். திராவிடர்களின் கடவுள் முருகன் என்ற கருத்து உறுதியாகும்படியாகவே இது உள்ளது.

ஆரிய நாகரிகம் இங்கு நடைமுறையில் இருந்த வழிபாட்டு முறையில் தாக்கத்தை ஏற்படுத்தி எளிதாக அதன் பயனை அனுபவிப்பவர்களாக மாறினார்கள். அதன் காரணமாக திராவிடர்களின் கடவுளான முருகனையும் அவர்கள் வழிபடுகிறார்கள். இவர்கள் புத்தரை கூட சாஸ்தாவாக உருவகப்படுத்தித் தங்கள் பிராமணியத்தில் உள்படுத்திக் கொண்டவர்கள்.

## நெடுநல்வாடையில் தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன்

இந்த முதல் பாடலுக்கே அதிகமான கவனத்தைச் செலுத்த வேண்டியதாகிவிட்டது. இருந்தாலும் முன்பு கூறியது போல் இது அவரது சிறந்த படைப்பு அல்ல. இனி நக்கீரரின் நெடுநல்வாடைக்குப் போவோம். இது பத்துப்பாடல்களின் வரிசையில் ஏழாவதாக வருகிறது. இவரது முதல் பாடல் முருகனை வாழ்த்துவதாக இருக்க, இது அன்றைய காலச்சூழ்நிலையின் அடிப்படையில் அமைந்து உள்ளது. இந்தப் பாடல் தலையாலங்கானத்துப் போரில் ஆரியப்படையை வென்ற நெடுஞ்செழியனைப் பாராட்டும் வகையாக பாடப்பட்டது. இவரது பெயருடன் இணைத்துக் கூறப்படும் தலையாலங்கானத்து வெற்றியைக் குறித்தோ அல்லது அந்த இடத்தைக் குறித்தோ எந்த உறுதியான செய்தியும் இல்லை. நமக்குத் தெரிந்து இவரது பெயர் பாண்டிய மன்னர் பரம்பரையில் குறிப்பிடப்படவில்லை. இந்தப் பெயரை பார்க்கும் பொழுது இது ஒருவரின் பெயராக இருக்குமா? என்ற சந்தேகம் தோன்றுகிறது. இந்தச் செழியன் என்ற பதம். வளமான என்று பொருள்படும், பாண்டிய மன்னர்களின் அடைமொழியில் ஒன்றாகும். நெடு என்றால் நீண்ட அல்லது பெரிய என்று பொருள்படும். அதாவது இந்த நெடுஞ்செழியன் என்பது மரியாதைக்குரிய அடைமொழி. இங்கிலாந்து மன்னர் முதலாம் எட்வர்ட் என்பவரை லாங் ஷாங்க் (Long Shank) என்று அழைப்பதைப் போல், இவரது அரச சபையில் புலவர்கள் மன்னரை இந்தப் புனைப் பெயரில் அழைத்திருக்கலாம்.

Long Shank: கி.பி 1272 முதல் 1307 வரை இங்கிலாந்தை ஆண்ட முதல் எட்வர்டு, நீண்ட கால்களை உடையவர் என்னும் பொருளில் லாங் ஷாங்க்ஸ் என்று அழைக்கப்பட்டார். இவர் திறமை மிக்கவராகவும் பலசாலியாகவும் இருந்தார். இவரது போர் வெற்றிகளுக்கு இவரது நீண்ட கால்களும் கைகளுமே முக்கியக் காரணம் என்று கருதப்படுகிறது.

இந்த நெடுஞ்செழியன் தொலைவிலும் அருகிலும் இருந்த எதிரிகள் அனைவரும் அச்சுறும்படியான வெற்றி வீரனாகத் திகழ்ந்தார். இந்த நெடுஞ்செழியனின் நம்பிக்கையை இழந்ததால் அந்த வன விரல் வேல் (Vana Viral Vel) என்ற மன்னன் தனது தலைநகரத்தை இழந்தான். சிறந்த துறைமுகங்களான முத்துவில்லில் (Muthuvilllil) மற்றும் நெல்லூர் (Nelloor)–ஐ இவர் கைப்பற்றினார். இந்த மாமன்னனின் வலிமையையும் படைத்திறனையும் உணர்ந்து, தங்களை அழிவிலிருந்து காப்பாற்றிக் கொள்ள குட்டநாட்டை, அதாவது திருவிதாங்கூரின் ஒரு பகுதியான ஆலப்புழை நகருக்குக் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள குட்டநாட்டு மன்னர், நெடுஞ்செழியனுடன் சமரசம் செய்து கொண்டு தனது அழிவில் இருந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டார்.

## இங்கிலாந்து கப்பல்படை, அர்மடாங் படையை வென்றது போல்

நெடுஞ்செழியன் அடைந்த மிகப்பெரிய வெற்றி தலையாலங்கானம் வெற்றி என்பதால் அவரது இந்த வெற்றியால் இந்த மன்னனின் பெயருடன் இணைந்து தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியன் என்று உலகம் போற்றுகிறது. நச்சினார்க்கினியர் கூறும் இந்த வெற்றியை நம்புவதாக இருந்தால், பாண்டிய மன்னரைப் போன்ற சேர, சோழ பேரரசர்களும் ஐந்து குறுநில மன்னர்களான திட்டன், எழினி, எருமையூரன், இருங்கோ வெண்மன் மற்றும் பொருநன் இணைந்து இந்த மதுரையின் நெப்போலியனை தோற்கடிக்க முயன்றபோதும் அவர்களின் அனைத்து முயற்சியையும் படுதோல்வி அடைய வைத்து வெற்றிவாகை சூடினான் இந்த மாவீரன்.

Spanish Armada: (ஸ்பானிஷ் அர்மடா) கி.பி.1588இல் நடந்த ஸ்பானிஷ் அர்மடா என்று கூறப்படும் கடல் போரில், பலம் பொருந்திய ஸ்பெயின் தேசத்துக் கடற்படையை இங்கிலாந்து கடற்படை எதிர்த்துப் பெரும் வெற்றிபெற்றது. அதுவரை சிறிய நாடாக இருந்த இங்கிலாந்து, இந்த வெற்றி முதல் எலிசபெத் ராணி அவர்களின் தலைமையில் பெரும் சாம்ராஜ்யமாக உருவாக வழிவகுத்தது.

இதை மதுரைக்காஞ்சியில் மாங்குடி மருதனார் இந்தப் போரில் பகைவர்களின் படை முரசு கூட பறிக்கப்பட்டு போர் என்ற யாகத்தில் நிராயுதபாணியாக்கப்பட்டார்கள் என்று கூறுகிறார். சிறந்த பழந்தமிழ் இலக்கியமான புறப்பாட்டில் இந்த மாமன்னனின் அதிஉன்னத வெற்றி மிக அழகாக விவரிக்கப்படுகிறது. இந்தச் சரித்திர உண்மைகளின் அடிப்படையில் இந்தத் தலையாலங்கானத்து வெற்றி ஒரு நிர்ணாயக வெற்றியாக மாறியது. பின்னர் இந்த

வெற்றி மதுரையின் பெருமையின் அடையாளமாக மாறி, சங்கத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உணர்வூட்டியது என்று எந்த சந்தேகத்திற்கும் இடமின்றி உறுதிப்படுத்துகிறது.

## நெடுநெல்வாடையில் கிராமிய சூழ்நிலை

கவிஞர், இந்தப் பிரிவு காலத்தின் ஒரு இரவைச் சித்தரிக்கிறார். அரண்மனையின் அந்தப்புரத்தில் நடக்கும் நிகழ்வைச் சித்தரிப்பதற்கு முன்பு வெகு தொலைவில் எங்கோ ஒரு கிராமப்புறப் பகுதியில் இருந்து தொடங்குகிறார். இடையர்கள் மழைக்காலம் தொடங்கிய உடனே தங்கள் கால்நடைகளை வேறு இடத்துக்கு கொண்டு சென்றனர். இப்பொழுது கார்த்திகை மாதத்தின் இறுதி காலம், இடியுடன் கூடிய காற்றும் மழையும் அதன் தாக்கத்தைக் குறைத்து, கருமேகங்கள் தங்கள் மழையைக் கொட்டித் தீர்த்து, லேசான மழையும் வாடைக் காற்றும் வேகமாக வீசிக் கொண்டிருக்கிறது. அங்குள்ள மரங்களில் வாழும் குரங்குகள் தங்கள் சேட்டைகளை எல்லாம் விடுத்து குளிரில் நடுங்கிக் கொண்டு, கைகால்களை மடக்கி, கூனிக்குறுகி சிறிய உருவங்களாகத் தெரிகின்றன. பறவைகள் அங்கும் இங்கும் பறந்து, தங்கள் சிறகுகளில் விழுந்த மழைத் துளிகளை, உடம்பை சிலிர்த்து விரட்டிக் கொண்டிருந்தன. ஆற்றின் ஆழம் குறைந்த பகுதியில் ஆற்று வெள்ளத்தின் தாக்கத்திலிருந்து தப்பித்து அங்குமிங்கும் சென்று கொண்டிருந்த மீன்களைப் பார்த்த இந்தப் பறவைகள் அவற்றில் ஏதாவது சிக்குமா என்று பார்த்துக் கொண்டிருந்தன. அங்குத் தாங்க முடியாத குளிரால் நடுங்கிக் கொண்டிருக்கும் கறவை பசுக்கள் தங்கள் இயற்கையான தாய்மை குணத்தை மறந்து, தனது கன்றுகளைக் காலால் உதைத்து விரட்டுகிறது.

இடையர்களின் நிலையோ இதைவிட பரிதாபமாக இருக்கிறது. இந்தத் துளைக்கும் குளிர் காற்றில் அவர்களின் சாதாரணமான நிகழ்வுகளான பூக்களையும் கனிகளையும் பறித்து விளையாடும் விளையாட்டை மறந்து, சிறு சிறு கூட்டங்களாகக் கூடி கிடைத்த பொருள்களை வைத்து நெருப்பை வளர்த்து அதன் தணலில் தங்களின் தாங்க முடியாத குளிரை விரட்ட முயன்று கொண்டிருந்தனர். அப்போது அவர்களுக்கு அந்தச் சிறிய வெளிச்சத்தில் தங்களைச் சூழ்ந்த கருமையின் அடர்த்தியை உணரமுடிந்தது. அவர்கள் தங்கள் கைகளை அந்த நெருப்பில் காண்பித்து சூடு ஏற்றி குளிரில் நடுங்கும் தங்கள் பற்களுக்கு இதமாகக் கன்னத்தில் அந்தச் சூடான கையை வைத்து அதன் தாக்கத்தைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவர முயன்று கொண்டிருந்தனர்.

கவிஞர் இந்த ரம்மியமான கிராமியச் சூழ்நிலையில் இருந்த நம்மை நகரத்திற்கு அழைத்துச் செல்கிறார். செழுமை நிறைந்த வயல்வெளிகளையும் அழகாக வளர்ந்து மரமாக நிற்கும் பாக்குமரத் தோட்டங்களையும் பழத்தோட்டங்களையும் பூஞ்சோலைகளையும் கடந்து செல்லும்போது செழுமையான, நன்றாக விளைந்த நெல் கதிர்கள் முதிர்ந்து தலை தாழ்த்தி இறைவனை வணங்கி நிற்கின்றது. பாக்கு மரத்தில் குலைகளாக இருக்கும் பாக்கு ஒவ்வொன்றும் நன்றாக வளர்ந்து திடமாகப் பருத்து, அந்தப் பெரிய காய்களைத் தன்னுள் அடக்கிக் கொண்டு, ஒய்யாரமாக அந்தக் காற்றில் ஆடித் தனது மணத்தைப் பரப்பிக் கொண்டிருந்தது. பழத்தோட்டங்களில் கனிந்து நிற்கும் பழங்கள் ஒன்றுடன் ஒன்று லேசாக முத்தமிட்டு தம் மீது இருந்த நீர்த்துளிகளை மகிழ்ச்சிக் கண்ணீராக வடித்துக் கொண்டிருந்தன.

தொடரும்...

# வெள்ளை யானை சாபம் தீர்த்த படலம்




திருவிளையாடல் புராணத்தில் மதுரைக் காண்டத்தில் இரண்டாவது படலம் ‘வெள்ளை யானை சாபம் தீர்த்த படலம்’ ஆகும்

இந்திரனின் வாகனமான ‘ஐராவதம்’ எனும் வெள்ளை யானை தன் ஆணவச் செயலால் சாபம் அடைந்தது. அச்சாபத்தினைப் போக்கிய சிவபெருமானின் கருணை மிகுந்த திருவிளையாடலை இப்படலம் கூறுகின்றது.

உயர்ந்த இடத்தில் பணியாற்றுபவர்கள் தங்களை உயர்வாக எண்ணிக்கொண்டு ஆணவத்துடன் நடந்து கொண்டால் அதன் விளைவு எப்படியிருக்கும்? என்பதை இப்படலத்தின் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்.

திரு. மு.அ.தங்கராஜு பாண்டியன்
ஓவிய ஆசிரியர், மதுரை



# வள்ளுவமும் இஸ்லாமும் போதிக்கும் நாவடக்கம்

முனைவர் மு.ரா.மஜிதா பர்வின்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, திருநெல்வேலி



## பகுதி–3

ஓர் ஊரில் ஒரு கழுதையும் ஒரு நரியும் நண்பர்களாக இருந்து வந்தனர். கழுதை, பகல் முழுவதும் பொதி சுமக்கும். இரவு வந்ததும் தன் நண்பன் நரியோடு சேர்ந்து வெள்ளரித் தோட்டத்தில் புகுந்து வெள்ளரிக்காய்களைத் திருடித்தின்னும். ஒருநாள் இரவு திருடச் செல்லும்போது கழுதைத் தன்னைப் பற்றி நரியிடம் பெருமையாகப் பேசிக் கொண்டே வந்தது.

“நான் நன்றாகப் பாடுவேன்...கேளேன்...” என்றது கழுதை.

“நீ வாயைத் திறந்தாலே கொடூரமாக இருக்கும். நீ பாடப் போறியா ?” கிண்டலடித்தது நரி.

“நன்றாகப் பாடுவேன். ஒருமுறை கேளேன். என்று ‘மறுபடியும்...மறுபடியும்’ கெஞ்சியது” கழுதை.

“திருடுகிறவன் தும்மல் வந்தால் கூடத் தும்மக் கூடாது. தெரியுமில்ல..” என்று சொன்னது நரி.

“தெரியும். களவு செய்கிறவன் தூங்கக் கூடாது. அதுவும் தெரியும்.” என்றது கழுதை.

“பிறகு எந்தத் தைரியத்தில் பாடுகிறேன்... பாடுகிறேன் என்கிறாய் ?” என்று கேட்டது நரி.

வாயைத் திறந்து பாடுவதில் குறியாக இருந்த கழுதை எப்படியாவது பாடிவிட வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தது.

“சரி பாடு... உன் ஆசையைக் கெடுப்பானேன். நான் காவலாளி வருகிறாரா ? என்று பார்த்துக் கொள்கிறேன். நீ வெள்ளரிக்காய்களைப் பறித்துவிட்டு வா. அப்புறம் வந்து பாடு” என்று சொல்லிவிட்டுத் தொலைவில் மறைந்து நின்று கொண்டது நரி.

கழுதை வயலுக்குள் புகுந்து வயிறு புடைக்கக் காய்களைப் பறித்துத் தின்றது. உற்சாக மிகுதியால் வயலில் நின்றபடியே உரக்கக் கத்திப் பாடியது கழுதை. கழுதையின் சத்தம் கேட்டு ஓடி வந்த காவலாளி கழுதையை நையப் புடைத்து விட்டார்.

களவெடுக்கப் போன இடத்தில் கானமா ? எங்க வாயைத் திறக்கணும் எங்க வாயைத் திறக்கக் கூடாது என்று நரிக்குத் தெரிந்த விவரம் கழுதைக்கு இல்லாததால் வாங்கிக் கட்டிக் கொண்டது. வாயிருக்கிறது என்று எல்லா இடங்களிலும் திறக்கக் கூடாது. பேசுவதற்குமுன் ஆயிரம் முறை யோசிக்கணும். பேசிவிட்டோமா ? அதன் பிறகு ஒருமுறை கூட அதைப் பற்றி யோசிக்கக் கூடாது. கன்னா பின்னா என்று கண்டதையும் பேசிவிட்டு

எத்தனை இடங்களில் அவமானப்பட்டுப் போயிருப்போம். சட்டென்று வாயில் வந்ததைச் சொல்லிவிட்டு நாக்கைக் கடித்துக் கொள்வது. சொல்வதைத்தான் சொல்லி ஆயிற்றே இனி நாக்கைக் கடித்து என்ன பயன்? வாயைப் பொத்தி என்ன பயன்? வார்த்தைகள் வாயில் இருக்கும்வரைதான் நீ அதற்கு எஜமான். வார்த்தைகள் வாயிலிருந்து வெளி வந்துவிட்டால் அந்த வார்த்தைகள்தான் உனக்கு எஜமான். ஐயோ என்றாலும் கட்டுப்படாது. அம்மா என்றாலும் கேட்காது. வாயைத் திறக்க பைசாதான் கொடுக்க வேண்டும் என்று யாராவது வைத்தாலும் பரவாயில்லை. அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்து விட வேண்டியது தான்.

தண்ணீருக்குள் இருக்கும் தவளை சும்மாவே கிடக்காது. மழை வந்துவிட்டால் தொண்டை கிழிய கத்தும். அதுவும் மொத்தத் தவளைகளும் ஒற்றைக் குரலில் கத்தும். தவளைகள் சும்மா கத்தாதாம். ‘வித்தெடு. விதை எடு. ஏர் எடு. கலப்பை எடு’ என்று உழவர்களைத் தூங்கவிடாமல் எழுப்புவதற்காகக் கத்துமாம். என்னே அறிவு தவளைக்கு! ஆனால், எத்துணை அறிவு இருந்து என்ன பயன்? தான் இருக்கும் இடம் எதிரிகளுக்குத் தெரிந்துவிடக் கூடாது என்ற அறிவு மட்டும் இல்லையே. தண்ணீருக்குள் கிடந்து சதா கத்திக் கொண்டிருப்பதால் எதிரிகள் எளிதாகத் தவளை இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்துவிடுமாம். அப்படியே பிடித்து விழுங்கி விடும். வாயை வைத்துக்கொண்டு சும்மா இருக்கத் தெரியாததால் தவளைகள் மாட்டிக்கொண்டு உயிரை மாய்த்துவிடும். இதைத்தான் முன்றுறையரையனார் என்ற புலவர்,

**“மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்**
**நுணலுந்தன் வாயால் கெடும்”**

என்று கூறுவார்.

இப்படித்தான் மனிதனின் நாக்கும். சும்மா இருக்காமல் சில நேரங்களில் பிரச்சினைகளை விலைக்கு வாங்கி வந்துவிடும். பாவம் புண்ணியம் கிடைப்பது எல்லாம் இந்த நாவால் மட்டும்தானாம். நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் நம்மைப் பற்றிய மதிப்பீடு. உயர்வதற்கோ, தாழ்வதற்கோ காரணமாக இருக்கும்.

‘அழகு மௌனமாக இருந்து பேசும்’ அதனால்தான் அழகாகப் பேசுபவர்கள்மீது அனைவருக்கும் அலாதிப் பிரியம் ஏற்படுகிறது. துருக்கி நாட்டில் இனிமையான குரல்வளம் கொண்ட தாரஸ் எனப்படும் ஒருவகை நாரை இனம் உண்டு. அவற்றின் குரல் வெகுதூரம்வரை கேட்கக் கூடியதாக இருக்கும். அவற்றின் குரலைக் கேட்டதும் எங்கிருந்தாவது வந்து பருந்து அதனைக் கொத்திச் சென்று விடுமாம். தமது குரலே தமக்கு ஆபத்தாக இருப்பதை உணர்ந்த நாரைகள் என்ன செய்வதென்று யோசித்தன. ஒலி எழுப்புவதுதானே பிரச்சினை. பறப்பதற்கு முன்பாக வாய்க்குள் கூழாங்கற்களைப் போட்டுக் கொண்டால் வாய் திறக்க முடியாதல்லவா? அதனால் பறக்கும்போது வாய்க்குள் கூழாங்கற்களைப் போட்டுக் கொண்டு பறக்கத் தொடங்குமாம்.

இப்படிப் பறப்பதால் நாரைகளுக்குக் குரல் எழுப்ப வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டாலும் அவற்றால் வாய் திறக்க முடியாதாம். பயண நேரங்களில் தங்களைக் காத்துக்கொள்ள தாரஸ் நாரைகள் இந்த உத்தியைத்தான் பயன்படுத்துமாம். இதனால் நாரைகளின் உயிர் எதிரிகளிடம் இருந்து காக்கப்படுகிறது. நாரைகளுக்கு மட்டுமல்ல. பல நேரங்களில் நமக்கும் இந்தக் கட்டுப்பாடு தேவைப்படுகிறது. 'தன் வாயையும் தன் நாவையும் காக்கிறவன் தன் ஆத்துமாவைத் துன்பத்திலிருந்து விலக்கிக் காக்கிறான்' – என்கிறது பைபிள்.

பேசுவதற்குமுன் யோசிக்க வேண்டும். யோசிப்பதை எல்லாம் பேசிவிடக் கூடாது. அதிகக் காலம் சிறை வைக்கப்பட வேண்டிய ஒரு பொருள் உண்டென்றால் அது நாவு மட்டும் தானாம். பேசக்கூடிய திறனை மனிதனுக்கு மட்டுமே இறைவன் வழங்கி இருக்கின்றான். வேறு எந்த உயிரினமும் மனிதனைப் போன்று அது பேசுவது கிடையாது. எனவே, மிகப்பெரிய அருளாக வழங்கப்பட்டுள்ள பேச்சைப் பயனுள்ள காரியத்திற்காக மட்டுமே நாம் பயன்படுத்திட வேண்டும். பயனற்றப் பேச்சுகள் என்பது பல்வேறு துன்பங்களை நம் வாழ்வில் கொண்டு வந்து சேர்த்து விடும்.

நபி (ஸல்) அவர்களிடம் ஒரு சஹாபி வெற்றிக்கு வழி என்ன என்பதாகக் கேட்டார், அப்போது நபி (ஸல்) அவர்கள் "உன்னுடைய நாவைக் கட்டுப்படுத்திக் கொள்வாயாக" என்று கூறினார்கள்.

மனிதனின் மதிப்பு அவன் நாவில் இருக்கின்றது. நாவின் மதிப்பு அவன் மனதில் இருக்கின்றது. அறிவு நிறைந்திருப்பவர்கள் பேச்சைக் குறைப்பார்கள். 'ஒருமுறை பேசவேண்டும்; இருமுறை கேட்க வேண்டும்' என்பதை மனிதர்கள் கடைப்பிடிக்க வேண்டும்.

### துணைநூற் பட்டியல்


1. ஆர்.என்.ஆசீர்வாதம்., பரிசுத்த வேதாகமம்–தமிழ் பைபிள் 1714., சுவிசேஷ ஊழிய நூல் நிலையம்., 95, வேப்பேரி நெடுஞ்சாலை, சென்னை–7.

2. தஃப்சீர் இப்னு கஸீரின்(மொ.ஆ)., திருக்குரான் தமிழ் மொழிபெயர்ப்பு., ரஹ்மத் பதிப்பகம்–2022.

3. புலியூர்க்கேசிகன்., பழமொழி நானூறு., பாரி நிலையம், 90 பிராட்வே சென்னை–18., 2007.

4. மு.வரதராசனார்., திருக்குறள் தெளிவுரை., பாரி நிலையம், 90 பிராட்வே, சென்னை– 18.,2014.


### Bibliography List


1. 1. RN Asirwadham., Holy Bible-Tamil Bible 1714., Evangelical Service Library., 95, Vepperi Highway, Chennai-7.

2. Tafseer ibn Qaseer (MoA), Tamil Translation of the Holy Quran, Rahmat Publishing-2022.

3. Puliyur Kazikan., Proverbs Four Hundred., Barry Station, 90 Broadway Chennai-18., 2007.

4. M. Varadarasanar., Thirukural Gallurai., Pari Station, 90 Broadway Chennai-18., 2014.


■ முற்றும்...

# கதிரவன் மற்றும் காற்றின் குழந்தைகள்

நாங்கள் இன்னும் வாழ்கிறோம்
இல்பொருள்நிலையின் விளிம்பில்
பருவங்கள் வடக்கு மற்றும் தெற்கின் இடையீடாக

நாங்கள் இன்னும் உறங்குகிறோம்
கல் தலையணைக் கட்டைகளில்
எங்கள் மூதாதையரைப்போல

நாங்கள் இன்னும் அதே மேகங்களையே
துரத்துகிறோம்
முள் மரங்களின் நிழலில் துயிலமைதிகொண்டு

நாங்கள் இன்னும் தேநீரை
உறிஞ்சிக்கொண்டிருக்கிறோம்
தீயை விழுங்கியவாறே.
அமைதியை அச்சுறுத்தாமலிருக்க
நாங்கள் வெறுங்காலுடன் நடக்கிறோம்.

தொலைவில் ––
பொய்த்தோற்றத்தின் விளிம்பில்
நாங்கள் இன்னும்
கூர்ந்து நோக்குகிறோம் ––
ஒவ்வொரு மாலைப் பொழுதிலும்
ஆதவன் கடலில் விழுவதை .

நாங்கள் இன்னும் காத்திருக்கிறோம்
ஒரு புதிய விடியலுக்காக
நாங்கள் இன்னும் காத்திருக்கிறோம்
மீண்டும் ஒரு தொடக்கத்திற்காக.
(சுருக்கப்பட்டது)



– சந்திரா மனோகரன்

## Children of the Sun and the wind

We still live // on the brink of nothingness,
between the north and south of the seasons

We still sleep // on stone pillows,
like our fathers

We still follow the same clouds,
resting in the shadows of thorn trees

We still drink down our tea while swallowing fire
and we walk barefoot not to frighten the silence

And in the distance // at the edge of the mirage
We still watch, every evening // the sun fall into the sea

And we still wait // for a new dawn
W still wait to begin again.

By
Tom Boll

# அமெரிக்க முத்தமிழ் இலக்கியப் பேரவைக் குழுமங்களின் செயல்பாடுகள்

தமிழ்மாமணி முனைவர்
**தாழை இரா.உதயநேசன்**
நிறுவனர்,
அமெரிக்க முத்தமிழ் இலக்கியப் பேரவைக் குழுமங்கள், அமெரிக்கா.



## அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழக நோக்கமும் செயல்பாடும்

சுவிட்சர்லாந்து, நார்வே முதலான நாடுகளில் இருந்து ஒரு வேண்டுகோளை முன்பு வைத்தார்கள். அதாவது தாங்கள் தமிழ்ப் பள்ளிகள் நடத்துகின்றோம். எங்களுக்கு முறையான சான்றுகள் இங்கே கிடைப்பதில்லை. இதற்காக நீங்கள் ஒரு பல்கலைக்கழகம் தொடங்கினால் எங்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று விரும்பினார்கள். இங்கே நான் தமிழ்நாட்டிற்கு வரும்போது, ஒரு நூல் வெளியீட்டு விழாவில் அமுதப் பாரதி, ஆண்டாள் பிரியதர்ஷினி, ஆரூர் தமிழ் நாடன் போன்ற தமிழ் ஆளுமைகளை யாரும் கண்டு கொல்லாமல் இருப்பதை அறிந்து கொண்டேன்.

அதே வாரத்தில் ஒரு தனியார் நிறுவனம் மூலம் முனைவர் பட்டம் வழங்கினார்கள். அங்கே பல் துறைகளில் இருந்து பலருக்கும் முனைவர் பட்டம் வழங்கினார்கள். அது ஒரு வியாபார நோக்கமாகச் செயல்பட்டதை அறிந்தேன். இவ்வாறான சூழலில் தான் இந்தப் பல்கலைக்கழகம் தொடங்க வேண்டிய தேவை ஏற்பட்டது. ஆனால், தாங்கள் இதை முறைப்படுத்திச் சட்டத்திற்கு உட்பட்டு வழக்கறிஞர்களிடம் ஆலோசனை செய்து, அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகத்தைப் பதிவு செய்துள்ளோம். குறிப்பாக நன்கொடை என்ற பெயரில் பணம் எதுவும் வாங்காமல், சிறந்தவர்களைத் தேர்ந்தெடுத்து முனைவர் பட்டம் வழங்குவோம் என்றே பதிவு செய்து இருக்கின்றோம். இதன் மூலம் ஆளுமைகளைக் கண்டறிந்து, முனைவர் பட்டம் வழங்கிச் சிறப்பித்து வருகின்றோம். இது பற்றிச் சந்தேகங்கள் யாருக்காவது இருந்தால், எங்கள் பல்கலைக்கழக இணையப் பக்கத்தில் அனைத்து விவரங்களையும் பதிவு செய்து வைத்துள்ளோம். அங்கே சென்று பார்த்துக் கொள்ளலாம். அமெரிக்க இந்தியானா மாகாணத்தில் இருந்து எங்கள் பல்கலைக்கழகம் இயங்கி வருகிறது.

உலகத் தமிழர்களுக்காக, தமிழ் மொழி வளர்ச்சிக்காகவே தொடங்கப்பட்டது. அமெரிக்க அரசாங்கம் இதற்கு அனுமதி வழங்கியுள்ளது. தமிழ்க் கலாச்சாரம், பண்பாடு பற்றி எல்லாம் விரிவுபடுத்த வேண்டும் என்ற எங்களின் கோரிக்கையை ஏற்று இந்தப் பல்கலைக்கழகத்தை நடத்த அமெரிக்க அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. எதிர்காலத்தில் இந்தப் பல்கலைக்கழகம் மூலமாகக் கல்வி நிறுவனங்கள் தொடங்குவதற்கான ஆலோசனையும் இருக்கிறது. அதற்கு முன்பாகத் தமிழ் வளர்ச்சிப்

பணிகளாகத் தமிழ் அமர்வுகள், இலக்கண இலக்கிய வகுப்புகள், தமிழ் வகுப்புகள், படைப்பிலக்கியப் பயிற்சி வகுப்புகள் போன்றவற்றை நடத்த இருக்கிறது. அதோடு, தமிழின் சிறந்த படைப்பாளர்களைத் துறைவாரியாகத் தேர்வு செய்து, சிறப்பு முனைவர் பட்டங்களையும் இந்தப் பல்கலைக்கழகம் வழங்கி இருக்கிறது. இதற்கான அங்கீகாரத்தையும் இந்தப் பல்கலைக்கழகம் அமெரிக்க அரசுப் பதிவு பெற்றிருக்கிறது.

இந்தப் பல்கலைக்கழகத்தின் வேந்தராக டாக்டர் இரா.உதயநேசன், துணைவேந்தராக டாக்டர் ஆல்வின், பதிவாளராக முனைவர் கோ.பாட்டழகன், கல்வித் தலைவராக முனைவர் ஜோ.சம்பத்குமார், ஆலோசனைக்குழுக்களாக மதிப்புறு முனைவர் கவிச்சுடர் க.நா.கல்யாணசுந்தரம், மதிப்புறு முனைவர் கவிமாமணி ஆரூர் தமிழ்நாடன், மதிப்புறு முனைவர் பாவலர் சரஸ்வதி பாஸ்கரன், நிருவாகக்குழு உறுப்பினர்கள் முனைவர் ஜெ.ஹாஜாகனி, முனைவர் ஜான் இளவரசு, முனைவர் டாக்டர் ஜெயராமன் பலராமன், முனைவர் இரா.செந்தில் குமார், முனைவர் கா.விஜயகுமாரி, பன்னாட்டு ஒருங்கிணைப்பாளர், கவிஞர் திருமகள் சிறியத்மநாதன், அலுவலகச் செயலாளர்கள், எழுத்தாளர் எம்.மேரிமுத்து, கவிஞர் ரேணுகா ஸ்டாலின், சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் எஸ்.பூங்குழலி ஆகியோர்களைக் கொண்டு


நிறுவனர்

தமிழ்மாமணி முனைவர்

**தாழை இரா.உதயநேசன்**

**தொடர்புக்கு :**

**அமெரிக்க முத்தமிழ்**

**இலக்கியப் பேரவைக் குழுமங்கள்**

6643, லோகஸ்ட் குரோவ் டிரைவ்,

இண்டியயானாபொலீஸ்,

இண்டியயானா 46237, அமெரிக்கா.

**மின்னஞ்சல் முகவரி**

www.americamutamiluniversity.org

**தொடர்புக்கு**

9159698466, 9976025731.


இயங்கி வருகின்றது. இப்பல்கலைக்கழகத்தின் முதல் பட்டமளிப்பு விழா சென்னையில் உள்ள சால்வேசன் ஆர்மி அரங்கில் நடைபெற்றது. அதேபோல், பல்கலைக்கழகப் பெயர் பலகை திறந்து வைத்து முனைவர் வி.ஜி.சந்தோசம் வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்தார். பின்னர் இப்பட்டமளிப்பு விழாவில், முனைவர் பட்டம் பெற்ற மதிப்புறு தமிழ் ஆளுமைகள் ஓவியக் கவிஞர் அமுதபாரதி, கவிஞர் ஆண்டாள் பிரியதர்சினி, கவிஞர் ஆரூர் தமிழ்நாடன், கவிச்சுடர் கா.ந.கல்யாணசுந்தரம், பாவலர் சரஸ்வதி பாஸ்கரன் ஆகியோர்கள் பட்டம் பெற்றனர். அதனைத்தொடர்ந்து இரண்டாம் பட்டமளிப்பு விழா சென்னை கோட்டூர்புரத்தில் அமைந்துள்ள தமிழ் இணையப் பல்கலைக்கழக அரங்கத்தில் உலக நாடுகள் உள்ளிட்ட தமிழ் ஆளுமைகளுக்கு மதிப்புறு முனைவர் பட்டம் கவிஞர் திரைக்கலைஞர் ஜோ மல்லூரி,

தமிழிசைப் பாடகர் டி.கே.எஸ்.கலைவாணன், கவிக்கோ ஞானச்செல்வன், கவிஞர் உமா பாரதி (மகாகவி பாரதி பெயர்த்தி), கவிஞர் மு.முருகேஷ், அஞ்சலி நாட்டியாலயா ரவிச்சந்திரன், திரைக்கலைஞர்–கவிஞர் ரேகா, பாடலாசிரியர் அருண்பாரதி, கவிமாமணி வெற்றிப்பேரொளி, எழுத்தாளர் மு.ஞா.செ.இன்பா, கவிஞர் ஜலாலுதீன், கவிஞர் பேச்சியம்மாள், பாவலர் முத்துசாமி, அமெரிக்க எழுத்தாளர் ஜெப்ரி அலெக்சாண்டர் ஆகிய 14 பேர் பட்டம் பெற்றனர்.

மேலும், இப்பல்கலைக்கழகமானது குளோபல் ஆர்ட்ஸ் அகாடமி பிரித்தானியா கலை கலாச்சாரப் பீடத்தினைப் பொறுப்பேற்கும் உடன்படிக்கையும் தமிழகத்தில் உள்ள பல்வேறு கல்லூரிகளில் புரிந்துணர்வு ஒப்பந்தமும் ஏற்படுத்திக் கொண்டு செயல்படுத்தி வருகிறோம். இப்பல்கலைக்கழகத்தின் மைய நோக்கம் எந்தவிதச் செயல்பாடுகளுக்கும் பணம் வாங்கிக் கொண்டு செய்யக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறோம். இதுவரையில் எனது சொந்த உழைப்பில் இருந்து வரும் பொருளாதாரத்தில் அனைத்தையும் செய்து வருவதாகவும் இனியும் இப்படித்தான் தொடரப் போவதாகவும் நிறுவனர் கூறினார்.

அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஓராண்டு காலப் பட்டயச் சான்றிதழ் படிப்புகள் அறிமுகம் 2023ஆம் கல்வியாண்டில் இனிதே உதயமாகிறது. இச்சான்றிதழ் படிப்புக்கான வகுப்புகள் இணையத்தின் வழியாக அந்தந்தத் துறைசார்ந்த வல்லுநர்களைக் கொண்டு வருகின்ற சனவரி மாதம் தொடங்க உள்ளது. இப்பல்கலைக்கழகத்தின் வாயிலாகப் பட்டம் பெற அனைவரையும் அன்போடு அழைக்கிறோம். மேலும், எட்டுக்கும் மேற்பட்ட பட்டயப்படிப்பு சார்ந்த விவரங்களைக் கீழ்க்கண்டவாறு காணலாம்.

பழங்குடியினரின் மொழியியல் மற்றும் பண்பாடு (Diploma in tribals language & Culture), சமூகப் பணி (Diploma in Social work), நாட்டிய கலாபூசனி (Diploma in Naatiya Kalabhoosani), தமிழ் இலக்கணமும் மற்றும் பயிற்சியும் (Diploma in Tamil grammer & training), தன்முனைக் கவிதைகள் பயிற்சியும் ஆய்வறிக்கையும் (Diploma in Self Assertive verses, training & report), தமிழ் மரபிலக்கணப் பாவலர் பட்டயச் சான்றிதழ் (Diploma in Tamil Pavalar Genetics grammer), ஒருங்கிணைந்த மருத்துவத்திற்கான சான்றிதழ் படிப்பு (Diploma in Certificate Course for Integrative Medicine), தலைமைத்துவத் தகுதிகளுக்கான சான்றிதழ் படிப்பு (Diploma in Certificate Course for Leadership Qualities), பிரசவத்திற்குப் பிந்தைய பராமரிப்புக்கான சான்றிதழ் படிப்பு (Diploma in Certificate Course for Post Pregnancy Care).

எதிர்காலத்தில் அமெரிக்க முத்தமிழ்ப் பல்கலைக்கழகம் பெரிய அளவிலான கல்வி நிறுவனமாக இயங்க இருக்கிறது. பல ஆராய்ச்சிகளைச் செய்ய இருக்கிறோம். இந்த வாய்ப்புகளை உலக அளவில் இருக்கும் தமிழர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

■ முற்றும்.

# முழு நிலவு

அன்பாய்ப் பண்பாய் அமுதாய்த் திகழ்வாய்!
வான்மேல் காண்பாய் உலாவும் தேனிலவாய்!

இரவுநேர வானிற்கு ஒளிதருவேன் சந்திரனாய்!
இரப்போர்க்கு உதவினால் இருப்பீர்கள் இந்திரனாய்!

உலகுக்கே ஒளிவிளக்காய்க் காட்சிதரும் முழுநிலவு!
உதவுகின்ற குலவிளக்காய்த் திகழ்வோர்க்கு இல்லைதாழ்வு!

கசடுஅறக் கற்றவரே முகத்திரண்டு கண்உடையார்!
தகடுஅழியத் தோற்றவரே உருக்குலைந்த புண்உடையார்!

கண்விழித்துக் காணுவர் காலைவேளை கதிரவன்!
கணக்கின்றிக் கைவிரித்துக் கரம்கொடுப்பவனே ஓர்இறைவன்!

கண்இமை உறங்கும்தருணம் கருத்தவானில் முழுமதி!
கரம்நீட்டிக் கொடுப்பவருக்கே சுவனத்தில் வெகுமதி!

தாய்வயிற்றில் பிறந்தோர்க்குத் தேவையா சச்சரவுகள்!
சேய்வழிக்கும் தொடருமே தேவையில்லாத் தொந்தரவுகள்!

தேன்சிந்தும் தேன்பாவாய்த் தெவிட்டாத தமிழ்நிலவே!
வியன்போற்றும் வெண்பனியில் விளங்குகின்றாய் வெண்ணிலவே!

பால்வீதிப் பாரினிலே பால்நிலவின் உலாக்காட்சி! – இன்றோ
நால்வீதித் தேரினிலே கண்கொள்ளாக் கண்காட்சி!


மழைமேகம் கூடினால் வின்சிந்தும் மழைத்துளிகள்!
பகைமோகம் தேடினால் வீண்பந்தம் கொலைப்பழிகள்!

மதிநிறைந்த மானிடரே! மிளிரவேண்டும் முழுநிலவாய்!
சாதிவெறிஎனும் பேரிடர் அகலவேண்டும் தேய்பிறையாய்!

– கவித்தென்றல் **பா. ரம்ஜான்,**
மதுரை.

# விழையாமை என்னும் பேராண்மை... (கதைகள்)

திருக்குறள் உலகத்தார் போற்றும் அறநூல்; வாழ்வியல் நூல் – அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தரித்த குறளுக்குப் பரிமேலழகர், மணக்குடவர் போன்றவர்கள் உரையிலிருந்து இன்றுவரை ஏராளமான உரைகள் வந்திருக்கின்றன. ஆனால், உரைகளைப் போல குறட்பாக்களைக் கதைகளின்மூலம் விளக்குவது அற்புதமான முயற்சி. அந்த முயற்சியில்தான் எழுத்தாளர் கவிஞர் ஹரணி அவர்கள் திருக்குறளின் 15ஆவது அதிகாரம் பிறனில் விழையாமையை ‘விழையாமை என்னும் பேராண்மை’ என்ற தலைப்பில் ஒரு சிறுநூலாக எல்லோரும் படித்துப் பயன்பெற எழுத்தாக்கம் செய்திருக்கிறார்கள்.




பேராசிரியர் முனைவர் க. அன்பழகன் அவர்கள் தஞ்சாவூர் உலகத் திருக்குறள் பேரவையின் பெருமைமிகு உறுப்பினர் ஆவார். தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் முனைவர் க.அன்பழகன் அவர்களின் சீரிய தமிழ்த் தொண்டினைப் பாராட்டித் தஞ்சாவூர் உலகத் திருக்குறள் பேரவை சார்பாகக் குறள்நெறி செல்வர் விருதினை வழங்கிச் சிறப்பு செய்தார்கள்.



தமிழ்ச்செம்மல்
**பழ.மாறவர்மன்**
தஞ்சாவூர்

**தலைப்பு : விழையாமை என்னும் பேராண்மை**
**வகை : திருக்குறள் கதைகள்**
**ஆசிரியர் : ஹரணி**
**வெளியீடு : அகழ் பதிப்பகம்**

முனைவர் க. அன்பழகன் அவர்கள் ஹரணி என்ற புனைப்பெயரில் எழுதிவரும் நாடறிந்த எழுத்தாளர் ஆவார். ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்துத் தமிழன்னையின் பாதங்களில் சமர்ப்பித்திருக்கின்றார். அவருடைய படைப்பில் உருவான 'விழையாமை என்னும் பேராண்மை' நூல் முப்பாலுக்கு ஒரு சிறிய தொடக்கம்.

நடிகர் சிவக்குமார் அவர்கள் திருக்குறள் 50 என்ற நூலில் 'வள்ளுவர் வழியில் வளர்ந்தவர்கள் வரலாற்றுடன் குறள்' என்ற நூலை எழுதியுள்ளார்கள். நடிகர் சிவக்குமார் அவர்கள் ஒரு சிறந்த ஓவியர், அரிய கலைஞர், சிறந்த சொற்பொழிவாளர், உயர்ந்த ஒழுக்கச் சீலர். அவர் அண்மையில் நூறு திருக்குறள்களுக்கு அவருடைய வாழ்க்கையில் நடந்த நிகழ்வுகள், நிகழ்ச்சிகள் மூலம் திருக்குறளுக்கு விளக்கம் சொல்லியிருக்கிறார். அவரைப் போலவே திரு ஹரணி அவர்களுக்கும் குறளின் கருத்தைக் கதையின் கருவாகக் கொண்டு, நல்ல கதைகள் மூலம் திருக்குறள் பிறனில் விழையாமை அதிகாரத்தை எல்லோருக்கும் எளிதில் புரியும் வண்ணம் கதைகளைச் செதுக்கித் திருக்குறளுக்குப் புதிய பரிமாணத்தை உருவாக்கி இருக்கிறார்.

பிறனில் விழையாமை என்பது பிறருடைய மனைவியைப் பிழையாய் விழையாத விழுமிய நீர்மை. தான் உரிமையாக மணந்த மனைவியைத் தவிர வேறு மங்கையரை ஒருத்தன் கலந்து களிக்க விழைவது கொடிய பழியாகும். இழுக்கான இந்த இழி பழி படியாமல் ஒழுகுவதே ஒழுக்கத்தின் உயர்வான உயிர்நிலைதான். வள்ளுவரின் உயரிய அதிகாரம் பிறனில் விழையாமை 10 திருக்குறள்களுக்கும் பத்துக் கதைகள் 1)கண்டார்கண் இல் ராகவன் கதாபாத்திரம் 2)நான் அவனில்லை அமைச்சர் ராஜசேகர் 3)மனதால் வாழ்வது துணிச்சலான சொர்ணா 4)முன்பே மனைவியாயிருந்தவள் வருந்துதற்குரிய வேதநாராயணன் 5)சொல்லும் பழியாகும் வருந்தும் பாலகிருஷ்ணன் 6)எதுவும் இல்லாதவன் மனைவியாக வருபவள் 7)மாண்புடை மனிதன்அருமை அரங்கநாதன்

8)பெரிதினும் பெரிது கேள் நேர்மையான பண்புடைய ராமசாமி 9)வரமே வாழ்க்கை தெளிவான குணமுடைய நீலா 10)கள்வனின் நீதி உரிய நேரத்தில் உறுதியான முடிவெடுக்கும் அனுஷா என ஒவ்வொரு குறளின் கதையிலும் வரும் கதாபாத்திரங்கள் மிளிருகின்றன. வள்ளுவன் கருத்துகள் கற்பனையில் ஒளிவீசுகின்றன.

அறநூல்களில் வள்ளுவம் முதன்மையானதும் முக்கியத்துவமானதும் ஆகும். முழுக்கப் பல்வேறு அறங்களை வள்ளுவம் வலியுறுத்தினாலும் தனித்துவமான சிறப்புடைய சில அறங்களை வள்ளுவத்தில் காணலாம். அவற்றுள் குறிப்பிடத்தக்க அதிகாரங்களுள் பிறனில் விழையாமை அதிகாரத்தைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். வள்ளுவத்துக்குப் பிறகு படைக்கப்பட்ட கம்பரின் கம்பராமாயணக் காப்பியம் மேற்சுட்டிய வள்ளுவ அதிகாரத்திற்குச் சிறந்த மிகப்பொருத்தமான சான்றாகப் பொருத்திப் பார்க்கலாம். பிறனில் விழையாமை அதிகாரத்திற்கு விரிவான பெருங்காப்பியத்தைக் கம்பர் படைத்து அளித்தார். எழுத்தாளர் ஹரணி குறுங்கதைகளைப் படைத்துள்ளார். திருக்குறளுக்குக் கதை எழுதுவது என்பது சாமானியமல்ல. ஹரணி அவர்கள் மிகுந்த கற்பனை திறத்துடன் ஒவ்வொரு குறளுக்கும் நல்ல கதையைப் புனைந்து குறளின் கருத்துகளைத் தெளிவாக்கி உள்ளார்கள். இளைய தலைமுறையினர் எளிதில் திருக்குறளை நன்கு பயில்வதற்கு இந்நூல் வழிகாட்டும்.



# பெருமையும் சிறுமையும்..!

அன்பே நமக்குப் பெருமை!
அகந்தை நமக்குச் சிறுமை!

ஆற்றல் நமக்குப் பெருமை!
ஆத்திரம் நமக்குச் சிறுமை!

இனிமை நமக்குப் பெருமை!
இகழ்தல் நமக்குச் சிறுமை!

ஈகை நமக்குப் பெருமை!
ஈனம் நமக்குச் சிறுமை!

உழைப்பே நமக்குப் பெருமை!
உட்பகை நமக்குச் சிறுமை!

ஊக்கம் நமக்குப் பெருமை!
ஊழல் நமக்குச் சிறுமை!

எளிமை நமக்குப் பெருமை!
எள்ளல் நமக்குச் சிறுமை!

ஏற்றம் நமக்குப் பெருமை!
ஏய்த்தல் நமக்குச் சிறுமை!

ஐம்புலன் நமக்குப் பெருமை!
ஐயம் நமக்குச் சிறுமை!

ஒழுக்கம் நமக்குப் பெருமை!
ஒழுங்கீனம் நமக்குச் சிறுமை!

ஔவை நமக்குப் பெருமை!
ஔவியம் நமக்குச் சிறுமை!

பெருமை வளர்த்தல் கடமை!
சிறுமை வளர்த்தல் மடமை!



–மதுரை பாபாராஜ்



# பிச்சை சோறு!



அன்னூர்
கே.ஆர்.வேலுச்சாமி



பெரிய நகரத்தில் உள்ள பெரிய நட்சத்திர விடுதி. மாலை ஐந்து மணி இருக்கும் நிலையில் உயர் ரகக் கார்களின் அணிவகுப்பால் அலுவலகங்களில் வேலை முடித்து இரண்டு சக்கர வாகனங்களிலும் கார்களிலும் வீடு நோக்கிச் செல்பவர்களும் ஊர்ந்து செல்லும் அளவுக்குப் பாதையில் வாகன நெருக்கடி!

விடுதியில் நடந்த அந்த ஊர் பெரிய மனிதரின் மகன் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் பிரபல இசையமைப்பாளரின் இசைக்கச்சேரி நடப்பது பாதையில் நடந்து செல்வோர் பேசுவது புரியாத அளவுக்கு ஒலிக்கிறதென்றால், உள்ளே இருப்பவர்கள் ஒருவர் பேசுவதை மற்றவர் புரிந்து விட்டதாக நடித்துச் சிரிக்கும் காட்சிகள் நாடகம் போல் அரங்கேறுவது அங்கு வந்திருந்த அறிவாளிகள் சிலருக்கு வியப்பாகப்பட்டது!

முன்பெல்லாம் விடுதியில் நிகழ்ச்சி முடிந்த பின் நடு இரவு வரை பாத்திரங்களுடன் பல ஏழைகள் காத்திருந்து மீதமாகும் உணவை வாங்கிச்செல்வர். இப்போது அனாதை விடுதிகளுக்கு அனுப்பி விடுகின்றனர். விடுதி முன் பசியோடு காத்திருக்கும் ஒருசிலருக்குக் கூட உணவு கிடைப்பதில்லை!

அன்றாடம் அப்பகுதியில் பிச்சை எடுத்து உண்டு வாழும் நான்கு பேரில் ஒருவன் இன்று எப்படியாவது விடுதியில் நடக்கும் விசேச நிகழ்ச்சியின் ஆடம்பர விருந்து உணவைச் சுவைத்து விட வேண்டும் எனப் பகீரதப்பிரயத்தனம் எடுத்து உணவு வழங்கும் பகுதிக்கு அருகில் சென்றவன், பசி மறந்து அங்கு நடப்பதை முதன் முறையாகக் கண்டு ஆச்சரியப்பட்டுக் கண் கலங்கினான்.

பலர் பாதி உணவை மட்டும் சாப்பிட்டு மூடி வைத்ததும் மூடி வைக்கப்பட்ட உணவு குப்பைக்குச் செல்வதும் குழந்தைகள் உணவு பிடிக்காமல் தட்டி விடுவதும் ஐம்பது வகை உணவு பரிமாறப்பட்டதும் தண்ணீர் பாட்டில்கள் திறக்கப்படாமலேயே குப்பைக்குச் செல்வதும் அதிர்ச்சியாக இருந்தது!

‘பலர் பிச்சையெடுத்து எச்சை சோற்றுக்கு அலைவது யாருடைய தவறு? நமக்கும் இவர்களைப்போல் தானே கைகால்கள் உள்ளன? பின் நாம் ஏன் இவர்களிடம் எச்சை சோற்றுக்குக் காத்திருந்து பிச்சை வாங்கக் கையேந்த வேண்டும்?’ என யோசித்ததில் உடல்

பசி மறந்து தற்போது மனம் பசித்ததைப் புரிந்து கொண்டு விடுதியை விட்டு உண்ணாமலேயே வெளியேறினான் பிச்சைக்காரன்!

அடுத்த நாள் அந்தப் பகுதியில் பிச்சை எடுப்பவர்களைக் காணாமல் கொண்டு வந்த பரிகாரப்பலன் கருதி வழங்க வந்த உணவு பொட்டலங்களைத் திருப்பிக்கொண்டு சென்றாள் பணக்காரப் பெண்!

பிச்சைக்காசில் சேர்த்த பணத்தில் உடனிருப்போரும் தானும் முடி வெட்டி, குளித்து விட்டு நேற்று விருந்து நடந்த விடுதியைச் சுத்தம் செய்யும் வேலைக்கு உழைக்கச்சென்று, அதற்குக் கிடைத்த சம்பளத்தில் அரிசி வாங்கிச்சென்று கஞ்சி வைத்துக் குடித்தபோது உடல் நிம்மதி, திருப்தி பெறாவிட்டாலும் மனம் நிம்மதி பெற்றது. இதுவரை பிச்சைக்காரனாக இருந்து தற்போது வேலைக்காரனாக உயர்ந்திருக்கும் நீலகண்டனுக்கு!

பத்து வருடங்களுக்குப் பின் அதே விடுதியில் தன் மகனுக்கு வரவேற்பு, விருந்து நடத்திய பழைய பிச்சைக்காரன் நீலகண்டனின் அழைப்பை ஏற்றுப் பல செல்வந்தர்கள் வந்திருந்தனர். ஆனால், உணவு அங்குச் சேதப்படுத்தப்படவில்லை, குப்பைக்குச் செல்லவில்லை!

விடுதியில் நுழையும் போது மணமக்களின் புகைப்படம் போட்ட பேனர் படங்களுக்குப் பதிலாக உணவுக்காகப்



பிச்சையெடுப்போரின் படங்களைப்போட்டு, ‘விழாவிற்கு வருகை தரும் உங்களுக்குப் பசியில்லையேல் வெளியில் பசியோடு வாழ்பவர்களுக்காக விருந்து உண்ணாமல் மணமக்களை மட்டும் வாழ்த்திவிட்டுச் செல்லுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது’ எனப் போடப்பட்டு இருந்தது! பசியில்லாதவர்கள் மணமக்களை வாழ்த்திவிட்டு, விருந்து நடக்கும் பகுதிக்குச் சென்று விருந்து உண்ணாமலேயே செல்வதைப் பார்க்க முடிந்தது. அனைவரையும் ஆச்சரியப்பட வைத்ததோடு, ‘தங்களது விழாக்களிலும் இந்த முறையைக் கடைப்பிடிக்க வேண்டும்’ எனப் பலர் எண்ணிச்சென்றது, பேசிச்சென்றது வித்தியாசமாகவும் புதுமையாகவும் அதே சமயம் நன்மையாகவும் இருந்ததை விழா நடத்திய நீலகண்டன் எண்ணி மகிழ்ந்ததோடு, அதே நட்சத்திர விடுதியில் அனாதை ஏழைகளுக்கென, பிச்சையெடுப்போருக்கெனத் தனி விருந்திடும் பகுதி ஒதுக்கப்பட்டிருந்தது. அனைவரையும் ஆச்சர்யப்பட வைத்ததோடு பாராட்டுகளையும் பெற வைத்தது! ■



# சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர்...

(18.02.1860 - 11.02.1946)



அ.செல்வபாரதி
ஆய்வியல் நிறைஞர், சென்னை

**“கட்சியைத் தச்சு செய்ததில்**
**மே தினச் செங்கொடியை உயர்த்தியதில்**
**தன்மான இயக்கத்தின் தடங்களில்**
**விடுதலைப் போரின் தகிக்கும் வெளிகளில்**
**அனைத்திலும் முதலாவதாக**
**அவரது சுவடு!**
**அவர் பெயர் சுட்டாது”**

**– கவிஞர் இன்குலாப்**

இத்தகு புகழுக்கு உரியவர், தென்னிந்தியப் பொதுவுடைமைவாதிகளின் முதல் தலைமுறைத் தலைவர்களில் மூத்த தலைவராக விளங்கியவர்; தமிழக அரசியல் வரலாற்றில், இந்திய அரசியல் வரலாற்றில் பொன்னேடுகளில் பொறிக்கப்பட வேண்டிய ஆளுமை சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலர்.

## இளமைப் பருவமும் கல்வியும்

மலையபுரம் சிங்காரவேலர் 1860ஆம் ஆண்டு பிப்ரவரி 18ஆம் நாள் சென்னையில் உள்ள அயோத்திகுப்பத்தில் வெங்கடாசலம்–வள்ளியம்மை தம்பதியரின் மூன்றாவது மகனாகப் பிறந்தார். ‘திரைகடலோடியும் திரவியம் தேடு’ என்பதற்கேற்பச் சிங்காரவேலரின் முன்னோர்கள் கடல்கடந்து வாணிபம் செய்து வந்தனர். அக்காலத்தே தென்னிந்திய இரயில்பாதையிலும் பங்குதாரர்களாக இருந்துள்ளனர் என்பதும் சிறப்பு. மேலும் அக்குடும்பத்தினர் அறக்கட்டளையை உருவாக்கி, வறுமையுற்ற ஏழை எளிய மக்களுக்கும் மீனவர்களுக்கும் தொண்டு செய்து மகிழ்ந்து வாழ்ந்துள்ளனர். திருப்போரூர், திருவான்மியூர், மயிலாப்பூர், திருவண்ணாமலை முதலான கோயிலிடங்களில் சத்திரங்கள் கட்டினர். விழாக் காலங்களில் தொலைதூரத்திலிருந்து வருவோர்க்குத் தங்கும் வசதி செய்து கொடுக்கும் விதமாக அச்சத்திரங்கள் அமையப் பெற்றிருந்தனவாம்.

செல்வச் செழிப்புமிக்க குடும்பத்தில் பிறந்த சிங்காரவேலர் பதின்ம பள்ளிப்படிப்பினை 1881ஆம் ஆண்டு நிறைவு செய்தார். சென்னை கிறித்துவக் கல்லூரியில் 1884ஆம் ஆண்டு எப்.ஏ. படித்து முடித்துப் பின்னர் மாநிலக் கல்லூரியில் இளங்கலை பெற்றார். 1907இல் சென்னை சட்டக்கல்லூரியில் வழக்கறிஞர் பட்டமும் பெற்றார். இவர் ஆங்கிலம், தமிழ் மொழிகளைத் தவிர, இந்தி, உருது, பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலி ஆகிய மொழிகளிலும் புலமை பெற்றிருந்தார்.

## இல்வாழ்க்கை

பகுத்தறிவுச் சிந்தனைத் தேடலில் வேரூன்றிய சிங்காரவேலர் 1889ஆம் ஆண்டு

அங்கம்மாள் என்பவரை மணந்தார். இத்தம்பதியர் கமலா என்ற பெண் மகவினைப் பெற்று இனிய இல்லறம் எய்தினர். இவர்களது திருமணமானது சாதி மறுப்பு மணம் என்பது குறிப்பிடத்தக்கது.

அப்போதைய காலகட்டத்தில் பெண்களுக்குச் சொத்துரிமை மறுக்கப்பட்ட நிலையில் சிங்காரவேலர் தனது மகளுடைய மகனான சத்தியகுமார் என்பவரை 1932ஆம் ஆண்டு தத்தெடுத்து வளர்த்தார்.

## வழக்கறிஞர் பணி

சிங்காரவேலர் சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் சபையில் வழக்கறிஞராக 1907ஆம் ஆண்டு தன்னைப் பதிவுசெய்து கொண்டார். பல வழக்குகளைச் சிறப்புடன் நடத்திப் புகழ்பெற்ற வழக்கறிஞரானார்.

இவர் பல வழக்குகளைத் தாமே சமாதானம் செய்து வைத்துவிடுவார். வழக்கறிஞர் தொழிலில் இறங்கிய சிங்காரவேலரோ அடக்குமுறையாளர்கள், பேராசைக்காரர்கள் ஆகியோரின் சார்பாக எந்தவொரு சூழ்நிலையிலும் வழக்காடியது இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. 1921ஆம் ஆண்டில் ஒத்துழையாமை இயக்கத்தினால் தனது வழக்கறிஞர் தொழிலைப் புறக்கணித்தார். அதற்கு முன்னதாகவே சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராகக் கொதித்தெழுந்த அவர், அயோத்திதாசப் பண்டிதர் தலைமையில் செயல்பட்டு வந்த பௌத்தச் சங்கத்திலும் தன்னை இணைத்துக்கொண்டு செயல்பட்டு வந்தார்.

## பொதுவுடைமைச் சிந்தனையும் சமூகச் செயல்பாடும்

பொதுவுடைமை என்றால் என்னவென்று தெரியாத காலத்தில் லெனினைப் போல், ஏங்கெல்சைப் போல் இயல்பாகப் பொதுவுடைமை உணர்வுடன் சிந்தித்தவர் சிங்காரவேலர். தன் அளப்பறிய சுயதேடலின் மூலம் பல்வேறு சிந்தனை மரபுகளைக் கற்றுணர்ந்தவர். பௌத்தராகத் தன் பயணத்தைத் தொடங்கிப் பல தடங்களைக் கடந்து ஒரு பொருள் முதல்வாதியாக, பொதுவுடைமைப் போராளியாகத் தன்னை வளர்த்துக் கொண்டு, சிறந்த பொதுவுடைமைவாதியாகவே உருவெடுத்தார். தொழிற்சங்கத் தலைவராக, சிந்தனையாளராகத் திகழ்ந்ததோடு மட்டுமல்லாமல், பொதுவுடைமை கருத்தியலை, முற்போக்கு சிந்தனையை மக்கள் மனதில் விதைக்கத் தன் எழுத்தையும் பேச்சையும் ஆயுதமாகப் பயன்படுத்தினார். மேலும், காந்தியடிகளின் விடுதலைப் போராட்ட வழியினை ஏற்று விடுதலைப் போராளியாகவும் திகழ்ந்தார்.

## விடுதலைப் போராட்ட வீரராக

அண்ணல் காந்தியடிகள் ஒத்துழையாமை போராட்டத்தைத் தொடங்கிய போது வழக்குரைஞர் அங்கியைத் தீயிட்டுக் கொளுத்திவிட்டுத் தீவிரமான விடுதலைப் போராட்ட வீரராக மாறினார். காந்தியடிகளைத் தன் தலைவராக ஏற்றார். தேச விடுதலைப் போராட்டங்களில், சமூகச் சேவைகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

ஊர் ஊராகச் சென்று கல்வியறிவு இல்லாத தன் மக்களுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்தார். அதுமட்டுமின்றி மக்களிடையே உரையாற்றித் தேசிய விழிப்புணர்வினை ஊட்டினார். வேல்ஸ் இளவரசரின் இந்திய வருகையை எதிர்த்துச் சென்னையில் மாபெரும் போராட்டத்தைத் தலைமையேற்று நடத்தினார்.

## இந்தியாவின் முதல் தொழிலாளர் தலைவர்

இந்தியாவில் தொழிற்சங்கங்களை உருவாக்கிய முதல் தலைவர் சிங்காரவேலர். பொருளாதாரச் சீர்திருத்தத்தை மனதில் கொண்டு, 'சென்னை தொழிலாளர் சங்கம்' என்ற சங்கத்தை இந்தியாவிலேயே முதன் முதலில் ஏற்படுத்தினார். வி.சி.வி ரயில்வே தொழிலாளர் சங்கம், நாகப்பட்டினம் ரயில்வே தொழிலாளர் சங்கம், கோயம்புத்தூர் தொழிலாளர் சங்கம் ஆகிய சங்கங்களை உருவாக்கியவரும் இவரே. இந்தியத் தேசியக் காங்கிரஸ் கயாவில் கூடியபோது, உலகத்தின் நலத்தில் ஈடுபாடு கொண்ட வெகுஜன அமைப்பின் பிரதிநிதியாகவே அவர் பங்கேற்றார். அப்போது அவர் கூட்டத்தினரைப் பார்த்து, 'தோழர்களே' என்று அழைத்தார். (இந்தியாவில் முதலில் தோழர் என்ற வார்த்தையைப் பயன்படுத்திய தலைவர்)

தொழிலாளர் சட்டங்கள் தேவை என உணர்த்தினார், காங்கிரஸ் இயக்கத்தின் ஒரு பகுதியாகவே தொழிலாளர் இயக்கமும் உள்ளது எனக் கருதினார். தொழிலாளர்களின் இலக்கு சுதந்திரம்; அது அரசியல், வணிக, பொருளாதாரச் சுதந்திரம் என அர்த்தப்படும் என்றார்.

## இந்தியாவின் மே தின முன்னோடி

இந்தியாவில் மே நாளை முதன்முதலில் கொண்டாடிய பெருமை சிங்காரவேலரையே சாரும். 1923ஆம் ஆண்டு மே முதல்நாளைக் கொண்டாடி, 'தொழிலாளி விவசாயி கட்சி' (Labour and Kissan Party of Hindustan)யையும் தோற்றுவித்தார். தொழிலாளர்களும் விவசாயிகளும் வெறும் ஊதிய உயர்வு கோருபவர்களாகவும் வேலை நேரத்தைக் குறைக்கப் போராடுபவர்களாகவும் இல்லாமல் முழு உரிமை பெறுவதற்கும் சுரண்டலை ஒழிப்பதற்கும் போராடும் முன்னணிப் படையாக விளங்க வேண்டும் என்பதே அக்கட்சியின் குறிக்கோளாகும். 'லேபர் கிசான் கெஜட்' என்ற ஆங்கில வார இதழையும் 'தொழிலாளன்' என்ற தமிழ் வார இதழையும் நடத்தினார். கட்சியின் செயல்பாடுகள் ஆங்கிலேயரின் சுரண்டலுக்கு எதிராக இருந்ததால் அரசாங்கம் சிறிது காலத்திலேயே கட்சியைத் தடை செய்தது.

1925இல் கான்பூரில் நடைபெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் மாநாட்டில் தலைமையுரை நிகழ்த்தினார். 1928இல் தென்னிந்திய ரயில் பாதை வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதால் 2 ஆண்டுகள் சிறைத் தண்டனைக்கு ஆளானார். பின்னர்ப் பெரியாரின் குடியரசு இதழில் மார்க்சியத் தத்துவங்களை மொழிபெயர்த்து எழுதினார்.

## சிங்காரவேலர் நூலகம்

தென்னிந்தியாவிலே தனிநபர் நூலகங்களில் மிகப்பெரிய நூலகம் சிங்காரவேலர் வீட்டு நூலகமாகும். 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட

நூல்களைத் தொகுத்து வைத்திருந்தார். அந்நூலகத்திற்கு ‘மார்க்சிஸ்டு லெனினிஸ்டு’ என்று பெயர். இவற்றில் பல நூல்கள் பொது உடைமை சார்ந்த நூல்களாகும். சிங்காரவேலர் சேகரித்த நூல்களில் ஒரு பகுதி ரஷியாவிலுள்ள பெரிய நூலகமான லெனின் நூலகத்தில் ‘சிங்காரவேலர் நூலகம்’ என்ற பிரிவில் இன்றும் உள்ளது.

அவருடைய நூலகம் தலைவர் பலரின் சிந்தனை மாறுதலுக்கு உந்து கோலாயிற்று. பொதுவுடைமை இயக்க வரலாற்றில் அறியப்பட்ட எம்.என். ராய், நம்பூரிபாட் முதலானோர் அந்நூலகத்தைப் பயன்படுத்தி உள்ளனர். தமிழகத்தில் பேரறிஞர் அண்ணா, ப.ஜீவானந்தம், மகாகவி பாரதி, குத்தூசி குருசாமி, எசு.வி. காட்டே முதலானோரும் அடங்குவர். சிங்காரவேலர் தான் மரணமடைவதற்கு முன்பு தன் வாழ்நாள் முழுவதும் சிரமப்பட்டுச் சேர்த்து வைத்திருந்த 10 ஆயிரம் அரிய புத்தகங்கள் கொண்ட நூலகத்தைக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார்.

## தமிழ்மொழிக் காவலர்

சிங்காரவேலர் 1925ஆம் ஆண்டு சென்னை நகராட்சித் தேர்தலில் காங்கிரசின் சுயராஜ்யக் கட்சி வேட்பாளராக நின்று நகராண்மைக் கழக உறுப்பினராக வெற்றி பெற்ற போது, “மனச்சான்றின் படி பொறுப்பேற்கிறேன்” என்று தமிழில் உறுதிமொழியெடுத்தார். பதவியேற்புக்குப் பின்னரும் தமிழிலேயே உரையாற்றினார். இவருக்குப் பின்னர்த் தான் தாய்மொழியில் பேசும் பழக்கம் நகராண்மைக் கழகத்தில் ஏற்பட்டது.

அனைத்துத் துறைகளிலும் தமிழ் மொழியைப் பயன்படுத்தும்படி பேசியும் எழுதியும் வந்த சிங்கார வேலர் தமிழர்களுக்கு அறிவியல் மனப்பான்மை உருவாக வேண்டும் எனும் நோக்கில் தமிழில் அறிவியல் கட்டுரைகள் பலவற்றை எழுதி வந்தார். தாய்மொழிக் கொள்கையை எங்கும் எப்போதும் வலியுறுத்தியவர். அதற்குத் தடையாக ஆங்கிலமோ, இந்தியோ வரக்கூடாது என்பார். தமிழ்மொழியின் தொன்மை குறித்தும் அனைத்துக் கலைகள், அரசு நிருவாகம் ஆகியவை தமிழில் வேண்டுமென்றும் வலியுறுத்தி வந்தார். மேலும், இவர் சென்னை மாநகராட்சி உறுப்பினராக இருந்த போது பள்ளிகளில் மதிய உணவுத் திட்டத்தினை வெற்றிகரமாகச் செயல்படுத்தினார்.

## எழுத்துப் பணி

சிங்காரவேலர் அக்காலத்தில் வெளிவந்த பல்வேறு இதழ்களில் கட்டுரைகள் எழுதுவதன் மூலம் மக்களிடம் பொதுவுடைமைக் கருத்துக்களையும் அறிவியல் கருத்துகளையும் தொழிலாளர் நலச் சிந்தனைகளையும் பரப்பினார். தி இந்து, குடியரசு, சுதர்மா, தமிழன், சுதேசமித்திரன், புரட்சி, பகுத்தறிவு முதலான பல இதழ்களில் பல தமிழ் மற்றும் ஆங்கிலக் கட்டுரைகளை எழுதியுள்ளார். அதுமட்டுமின்றித் தொழிலாளன், தோழன் ஆகிய இருமாத இதழ்களையும் லேபர்–கிசான் கெசட் என்ற ஆங்கில மாத இதழையும்

நடத்தினார். மே 1, 1935 அன்று 'புது உலகம்' என்ற மாத இதழை அறிவியல் செய்திகளைப் பரப்புவதற்காகத் தொடங்கி நடத்தினார்.

சுயராச்சியம் யாருக்கு? (மூன்று பாகங்கள்), மனிதனும் பிரபஞ்சமும், தொழிலாளர் துயரமும் உலக நெருக்கடியும், சோசியலிச மாநாட்டின் தலைமையுரை, மெய்ஞான முறையும் மூடநம்பிக்கைகளும் முதலான பல நூல்களை இயற்றியுள்ளார்.

இவரது இறப்பிற்குப் பின் இவரது கட்டுரைகள் பல தொகுப்பு நூலாக அறிஞர்களால் வெளியிடப்பட்டுள்ளன. சிங்காரவேலரின் நூல்கள் தமிழக அரசால் 2007ஆம் ஆண்டு நாட்டுடைமையாக்கப்பட்டன.

பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்ட சிங்காரவேலர் தன் வாழ்நாளின் இறுதிவரை தனது எழுத்துகள் மூலமும் பேச்சு மூலமும் தொழிலாளர் நலனுக்காகவும் பொதுமக்கள் உரிமைக்காகவும் பணியாற்றி வந்தார். தன் 86ஆம் வயதில் பிப்ரவரி 11, 1946 அன்று இரவு உடல்நலக்குறைவால் இயற்கை எய்தினார்.

## புகழ்வாழ்வும் போற்றுதலும்

பாவேந்தர் பாரதிதாசன் 'போர்க்குணம் மிகுந்த நல்செயல் முன்னோடிப் பொதுவுடைமை கேகுக அவன் பின்னாடி' என்று சிங்காரவேலரைப் புகழ்ந்துள்ளார். தலைவர்கள் பலரும் இவரது புரட்சி நிறைந்த அருந்தவ வாழ்வினைப் பேற்றியுள்ளனர்.

சிங்காரவேலரின் தொண்டினைப் போற்றிடும் வண்ணம் தமிழக அரசு பல்வேறு வகையில் சிறப்பு செய்து வருகிறது. மீனவர் நலன் காப்பதைத் தன் முதல் பணியாகச் செய்த சிங்காரவேலரின் தொண்டினை நினைவு கூறும் விதமாக மீனவர் வீட்டு வசதித் திட்டத்துக்கு இவரது பெயரைச் சூட்டியுள்ளது.

மேலும், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குச் சிங்காரவேலர் மாளிகை என்று பெயர் சூட்டியது. இவர் பிறந்து 150 வருடங்கள் நிறைவுறுவதை நினைவுகூரும் விதமாகத் தமிழக அரசு சிங்காரவேலர் பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடியது. அதன்படி 2011, பிப்ரவரி 18 அன்று அனைத்து அரசுப் பள்ளிகளிலும் சிங்காரவேலர் பிறந்தநாள் விழா கொண்டாட ஆணை பிறப்பிக்கப்பட்டது. அவரது சிந்தனைகள், வாழ்க்கை வரலாறு, ஆகியவற்றைக் குறித்து மாணவ மாணவிகளுக்குக் கட்டுரைப் போட்டிகள், கருத்தரங்குகள் நடத்தப்பட்டன. அதுமட்டுமின்றித் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை மூலம் 2018ஆம் ஆண்டு முதல் தமிழில் அறிவியல் கருத்துகளை நூலாக எழுதுபவர்களிலும் சமுதாய முன்னேற்றத்திற்காகவும் சமத்துவக் கொள்கைக்காகவும் தொழிலாளர் நலனுக்காகவும் போராடுபவர்களிலும் சிறந்த ஒருவருக்குச் சிங்காரவேலர் விருது அளிக்கப்படுகிறது.

நாமும் சிங்கார வேலரின் தொண்டினைப் போற்றிடும் வண்ணம் நம்மால் இயன்ற மக்கள் நலப்பணி செய்வோமாக!

## கனடா எழுத்தாளர்

# முத்துலிங்கமும் தமிழும்...



### திரு.அ.முத்துலிங்கம்
(1937)

எழுத்தாளர் அ.முத்துலிங்கம் அவர்கள் இலங்கையின் கொக்குவில் என்ற இடத்தில் பிறந்து வளர்ந்தவர். கொழும்பு பல்கலைக்கழகத்தில் தனது விஞ்ஞானப்படிப்பைப் பயின்று பணியில் சேர்ந்தவர். பல நாடுகளில் பணியாற்றியவர். அறுபதுகளில் எழுதத் தொடங்கிய இவர் சிறுகதைகள், நாடகங்கள், நாவல்கள், கட்டுரைகள், கவிதைகள் என எழுதிவருகிறார். இவர் தொடக்கத்தில் மாத இதழ்களில் எழுதி வந்தார். இவரது படைப்புகள் 16 நூல்களாக வெளிவந்துள்ளன.

இலங்கை அரசின் சாகித்ய விருதைப் பெற்றவர். இலக்கியச் சிந்தனை விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளார். புலம்பெயர் தமிழர்களின் வாழ்வாதாரங்கள் பற்றியதாக இவரது படைப்புகள் விளங்கின. இலங்கையில் பிறந்து பிறதுறையில் பணியாற்றினாலும் ஒரு மிகச்சிறந்த படைப்பாளராகத் தமிழ் இலக்கிய உலகில் தடம்பதித்த எழுத்தாளர் அ.முத்துலிங்கத்தின் தமிழ்ப் பணிகளைப் போற்றிப் பாராட்டுவோம்!.



# எங்கள் மலை...



முனைவர் **உ. அனார்கலி**
மதுரை

மனிதர்களுக்குத் தாங்கள் வாழும் நாடு, மாநிலம், நகரம், ஊர், தெரு மீது அளப்பரிய பற்றும் பாசமும் இருக்கும். தான் பிறந்த மண்ணின் பெருமை நெஞ்சில் பீறிட்டு எழுவது இயல்பு. அயல்நாட்டவரிடம் சொந்த நாட்டின் சிறப்பு இயல்புகளைக் கூறி மகிழ்வது மனதிற்கு இதமளிக்கக் கூடியது.

உள்ளூர் மக்கள் தங்கள் ஊர்பெருமை பேசிப் பேசியே மகிழ்ச்சி எய்துவர்.

**'பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும்**
**நற்றவ வானினும் நனி சிறந்தனவே'**

என்று பாடி மகிழ்கிறார் பாரதி.

குறிசொல்லும் குறத்தி ஒருத்தியும் தான் பிறந்து, வளர்ந்து, வாழும் மலை குறித்துக் கூறி மகிழ்வதைக் குற்றாலக் குறவஞ்சி பதிவு செய்கிறது. ஒவ்வொரு சொற்றொடரிலும் 'எங்கள்மலை', 'எங்கள்மலை' என்றுகூறி பெருமிதமும் பூரிப்பும் கொள்கிறாள்.

ஆண்குரங்குகள், பல்வேறு பழங்களைத் தன் இணைகளுக்குக் கொடுத்துக் காதலை வெளிப்படுத்துகின்றன. அன்போடு அதைப் பெற்ற பெண் குரங்குகள் ஆசையோடு உண்ணும் பொழுது சிதறும் பழங்களுக்கு ஆசைப்பட்டு தேவர்கள் இரங்கி நிற்பார்கள் என்று, கனிவளம் பொருந்திய மலையைச் சிறப்பித்துக் கூறுகிறாள் குறத்தி,

**"வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்**
**மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்"**

என்று குரங்கினங்களின் காதல் வாழ்க்கையைச் சித்தரிக்கிறாள்.

வேடர்களின் விருப்பப்படி, வானவர்கள் வந்து அரிய மூலிகைகளை விளைவிப்பர். தேனருவியில் கொட்டும் நீரின் அலை வானைத் தொடும் அளவு எழும்பும். அதனால், சூரியனின் தேரை இழுத்துச் செல்லும் குதிரைகளின் கால்கள் வழுக்கும் என்று நீர்வளம், பயிர் வளம் குறித்து குதூகலிக்கும் குறத்தி,

**"கூனலிளம் பிறை முடித்த வேணி அலங்காரர்**
**குற்றாலத் திரிகூடமலை எங்கள் மலையே"**

என்று இறைவன் எழுந்தருளியமலை எனப் புகழ் பாடுகிறாள்.

முழங்கி நீரைக் கொட்டும் அருவிகள் கழங்கு விளையாடுகிறது என்று சொல்லும்படி முத்துக்களைச் சிதறிச் செல்லும், சிறுமிகள் மகிழ்ந்துவிளையாடும் சிற்றில்களை அழித்துச் செல்லும். நாங்கள் மலைக்கிழங்குகளைத் தோண்டி எடுப்போம். பாடிக்கொண்டே தேன் இறால்களைப் பிய்த்து எடுப்போம்.

வறுத்தத் தினையை யானையின் கொம்பு கொண்டு இடித்த, மந்திகள் மாம்பழங்களைப் பந்தடித்து விளையாட, மலையெல்லாம் பரவிக் கிடக்கும் செண்பகப் பூவின் மணம் தேவர் உலகம் வரை சென்று வீசும்.

'தேன் அலர் சண்பகவாசம் வானுலகில் வெடிக்கும், மணிசங்கும் நாகங்கள், அகில், குங்குமம், சந்தன மரங்கள், வரையாடுகள் என

நிரைந்து கிடப்பது எங்கள்மலை' என மலையின் பல்லுயிரினச் சூழலை மகிழ்வோடு எடுத்தியம்புகிறாள் குறத்தி. கயிலை மலைக்குத் தெற்காக, இருக்கும் எங்கள்மலை, மேருமலை போன்று உயர்ந்த மலை,

**"கயிலை எனும் வடமலைக்குத் தெற்குமலை அம்மே**

**கனகமகா மேருஎன நிற்குமலை அம்மே"**

எனப் புகழ்கிறாள்.

எங்கள் மலை எங்கள் மலை என்று உரிமை கொண்டாடிய குறத்தி மலைகள் அனைத்தும் அவளின் குடும்பச் சொத்தாகக் கூறுகிறாள். கொல்லிமலை, செல்லி எனும் பெயருடைய என் தங்கைக்குரியது. அவளின் கணவனுக்குப் பழனிமலை உரியது. ஞாயிறு தொட்டு விடும் அளவுக்கு உயர்ந்த மலையாகிய விந்தைமலை என் தந்தையின்மலை. சாமிமலை என் மாமிக்குரியது. நாஞ்சில் நாட்டிலுள்ள வேள்வி எனும் மலை தன் தோழிக்கு உரியது என்று நீட்டி முழங்கும் குறத்தி,

**"செல் இனங்கள் முழவு கொட்ட மயிலினங்கள் ஆடும்**

**திரிகூடமலை எங்கள் செல்வமலை அம்மே"**

என்று பாகம் பிரிப்பதோடு, சொத்தில் பெண்ணுக்கு இருக்கும் உரிமையையும் பதிவு செய்கிறாள். தங்களின் இருப்பிடமாகிய மலையின் சிறப்பையும்– உறவுகளின் உரிமையையும் கூறிய குறத்தி, தங்கள் குலத்தின் தனித்தன்மையைப் பாடிச் சிறப்பிக்கிறாள். எங்கள் குறக்குலம் தவிர, பிற குலத்தில் பெண் எடுத்தல், கொடுத்தல் கிடையாது. ஆனாலும், எங்களின் தினைப் புனத்திற்கு வந்த பெரு விலங்காகிய யானையைத் தடுத்துக் காத்த முருகனுக்கு எங்களின் வள்ளிப் பெண்ணைக் கொடுத்து, மகட் கொடையாக (சீதனமாய்) எங்களுக்குரிய சில மலைகளைக் கொடுத்தோம். துருவனுக்கு மேரு மலையைக் கொடுத்தோம்



என்று மரபு மாறிய நிலைக்குக் காரணம் கூறி மகிழ்கிறாள் குறத்தி.

**"வெருவி வரும் தினைப் புனத்திற் பெரு மிருகம் விலக்கி**

**வேங்கையாய் வெயில் மறைந்த பாங்கு தனைக் குறித்தே**

**அருள் இலஞ்சி வேலர் தமக் கொரு பெண்ணைக் கொடுத்தோம்**

**ஆதினந்து மலைகளெல்லாம் சீதனமாக் கொடுத்தோம்"**

என்று தங்களின் நாடாகிய மலை நாடு குறித்துப் பேசி மகிழ்கிறாள் குறத்தி.

தங்களின் வளம், சிறப்பு, குலச் சிறப்பு, மகட்கொடை குறித்துப் பேசும் அனைத்துத் தருணங்களிலும் திரிகூடமலையின் பெருமையையும் பதிவு செய்கிறாள் குறத்தி. எளிய தமிழிலும் மக்கள் இசையிலும் நெய்யப்பட்ட குற்றாலக் குறவஞ்சி என்னும் நூல் திரிகூடராசப்பக் கவிராயரால் 18ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டது. அந்நூலில் வரும் குறத்தி எங்கள்மலை, எங்கள்மலை என்று தான் பிறந்து வளர்ந்து வாழும் மலையைச் சிறப்பித்துக் கூறுகிறாள்.

# உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

## வேறெங்கும் இல்லாத வசதிகளுடன்
## மதுரையில்...

*நகரின் மையப் பகுதியில்...*
*குறைந்த வாடகையில்...*
*நிறைந்த வசதிகளுடன்...*
*அரங்குகள் வாடகைக்கு....*

### கலையரங்கம்





### சிறப்பம்சங்கள்

- 400 பேர் அமரும் கலையரங்கம் ...
- 200 பேர் அமரும் இரண்டு கூட்டஅரங்கம்...
- 300க்கும் மேற்பட்டோர் உணவருந்தும் திறந்தவெளி உணவுக்கூடம்
- கண்காட்சி மற்றும் கடைகள் அமைப்பதற்கான விசாலமான இடவசதி
- சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்
- தூய்மையான கழிப்பறை
- பிரம்மாண்டமான மேடை அமைப்பு
- மின்காட்சி வெளியிடும் வசதி
- 24மணி நேர மின்சாரம்
- விசாலமான வாகனம் நிறுத்தம்
- பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான போட்டிகளுக்கு...
- அரசு சார்ந்த நிகழ்வுகள் மற்றும் விழாக்களுக்கு...
- சமயச் சார்பற்ற நூல்கள் வெளியிட...
- பண்பாடு, கலை, இலக்கியம் தொடர்பான நிகழ்வுகளுக்கு...

### கூட்ட அரங்கம்






**பதிவுசெய்ய அணுகவும்...**

**உங்கள் நிகழ்வுகள்
நீங்காத நினைவுகளாக
வாழ்வில் நிலைத்திருக்க...
உடனே முன்பதிவு செய்யுங்கள்...**

**தொடர்புக்கு...**

0452–2530766/2530799
utsmdu2@gmail.com

**முன்பதிவிற்கு
உடனே அணுகவும்**

Uts Mdu @TamilUlaga
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை




## படைப்புகள் வரவேற்பு...

உலகத் தமிழ்ச் சங்கம் மதுரையின் சார்பில் திங்கள்தோறும் வெளிவந்து கொண்டிருக்கும் உலகத்தமிழ் மின் ஆய்விதழுக்குக் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், ஓவியங்கள் வரவேற்கப்படுகின்றன. படைப்புகள் தங்களின் சொந்தப் படைப்பாகவும் இதுவரை வெளியிடப்படாதவையாகவும் இருத்தல் வேண்டும். படைப்பாளர்கள் தங்களின் படைப்புகளை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி : utsmdu2@gmail.com (குறிப்பு: ஆசிரியர் குழுவால் தெரிவு செய்யப்படும் படைப்புகள் மட்டுமே இதழில் வெளியிடப்படும். படைப்புகளைத் திருத்தியமைக்க ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு).

நன்றி!

– ஆசிரியர்



# உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை

## வெளியீடுகள்




<u>தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி</u>

இயக்குநர்,
உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை
மருத்துவர் தங்கராசு சாலை,
சட்டக் கல்லூரி அருகில்,
மதுரை – 625020.

தொலைபேசி எண்:
0452 – 2530799
மின்னஞ்சல் முகவரி :
utsmdu.research@gmail.com